

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 134 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 8 – ஞாயிற்றுக்கிழமை 24 டிசம்பர் 2023 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 134 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 8 - Sunday 24 December 2023 - Chennai 12 Pages ₹ 5.00


## எண்ணூர் பகுதியில் எண்ணெய்க் கசிவினால் பாதிக்கப்பட்ட

# 9 ஆயிரம் குடும்பங்களுக்கு ரூ.8.68 கோடி நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, டிச. 24-**

**"மிக்ஜாம்" புயலின் போது பெய்த கனமழை காரணமாக எண்ணூர் முகத்துவாரப்பகுதியில், சென்னை பெட்ரோ கெமிக்கல் நிறுவன வளாகத்திலிருந்து வெள்ள நீரோடு கலந்து வெளிவந்த எண்ணெய் கசிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 8 கோடியே 68 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

கொசஸ்தலை ஆற்றில் எண்ணூர் முகத்துவாரப் பகுதியில் கடந்த 05.12.2023 அன்று ஏற்பட்ட எண்ணெய்க் கசிவினை அகற்றிட தமிழ்நாடு அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்நிகழ்வில் காட்டுக்குப்பம். சிவன்படைகுப்பம். எண்ணூர் குப்பம் முகத்துவாரகுப்பம். தாழங்குப்பம். நெட்டுக்குப்பம். வ.உ.சி நகர். உலகநாதபுரம் மற்றும் சத்தியவாணி முத்து நகர் ஆகிய கடலோர மீனவக் கிராமங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடிப் படகுகள் மற்றும் மீன்பிடிவலைகளில் எண்ணெய் படிந்து சேதம் ஏற்பட்டது.

மேலும் இக்கிராமங்களைச் சார்ந்த மீனவர்கள் எண்ணெய்க் கசிவினால் மீன்பிடித் தொழிலுக்குச் செல்ல இயலாததால் அவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டது. இதைக் கருத்தில் கொண்டு, முதலமைச்சர் மு.கஸ்டாலின் அவர்களால் "வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்" என அறிவிக்கப்பட்டு, அத்தொகையும் ஏற்கனவே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**மீனவர்களின் வங்கிக் கணக்கில் வரவு!**

இதனைத் தொடர்ந்து கூடுதலாக, எண்ணெய்க் கசிவினால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மேற்கண்ட மீனவக் கிராமங்களைச் சார்ந்த 2,301 குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையாக தலா ரூ.12,500 வீதமும் - மேலும் எண்ணெய்க் கசிவினால் பாதிக்கப்பட்ட 787 மீன்பிடிப் படகுகளைச் சரிசெய்திட படகு ஒன்றுக்கு தலா ரூ.10,000 வீதமும் - மொத்தம் 3 கோடி ரூபாய் அரசினால் ஒப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்நிவாரணத் தொகை, பாதிக்கப்பட்ட மீனவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது.

மேலும் சென்னை மாநகராட்சி மண்டலம் 1 வார்டு 4, 6, மற்றும் 7 ஆகிய பகுதிகளில் எண்ணெய்க் கசிவினால் பாதிக்கப்பட்ட 6,700 குடும்பங்களுக்கு தலா ரூ.7,500 வீதம் மொத்தம் 5 கோடியே 2 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகை வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்நிவாரணத் தொகை, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும். எனவே, மிக்ஜாம் புயல் கனமழையினால் ஏற்பட்ட எண்ணெய்க் கசிவினால் பாதிக்கப்பட்ட 9,001 குடும்பங்களுக்கு 8 கோடியே 68 இலட்சம் ரூபாய் வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.12.2023) தலைமைச் செயலகத்தில், இந்து தமிழ் திசைப் பதிப்பகத்தால் தயாரிக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் அவர்களைப் பற்றிய தொகுப்பு நூலான "என்றும் தமிழர் தலைவர்" என்ற நூலை வெளியிட்டார். உடன் இந்து தமிழ் திசைப் பதிப்பகத்தின் உதவி ஆசிரியர் ஆதி வள்ளியப்பன், தலைமைச் செயல் அலுவலர் சங்கர் சுப்பிரமணியன், தலைமை உதவி ஆசிரியர் திருமதி சுசித்ரா மகேஸ்வரன், மேலாளர் இன்பராஜ் ஆகியோர் உள்ளனர்.

## நிவாரணப் பொருள்கள் வழங்கிய

# கேரள உடன்பிறப்புகளின் அன்புக்கு நன்றி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, டிச.24-**

**தமிழ்நாட்டுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கிய கேரள உடன்பிறப்புகளுக்கு நன்றி தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**

கனமழையால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டு மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கிய கேரள உடன்பிறப்புகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நன்றி தெரிவித்து வெளியிட்ட சமூக வலைதளப் பதிவு வருமாறு :

கனமழையால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டு மக்களுக்கு கேரள மாநில சகோதர, சகோதரிகள் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்ததற்காக, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "கேரள உடன்பிறப்புகளின் அன்புக்கு நன்றி" என்று தனது சமூக வலைதளத்தில் பதிவிட்டு நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

## ஒன்றிய அரசின் தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து நிதி தந்தது போல அடித்துப் பேசுவதா?

# தமிழ்நாடு மக்கள் மீது கொஞ்சமாவது அக்கறை வைத்து நிதியைத் தாருங்கள்!

## ஒன்றிய நிதி அமைச்சருக்கு - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, டிச. 24-**

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவொன்றில், "ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் மாநில பேரிடர் நிவாரண நிதியைத் தந்து விட்டு, ஏதோ ஒன்றிய அரசின் தேசிய பேரிடர் நிவாரண நிதியி லிருந்து தந்தது போல, ஒன்றிய நிதி அமைச்சர் அடித்துப் பேசுவதா?" எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.**



**மேலும் அவர் தமது பதிவில், 'தமிழ்நாடு மக்கள் மீது கொஞ்சமாவது அக்கறை வைத்து நிதியைத் தாருங்கள்!' என்று கேட்டுக் கொண்டுள்ளார்.**

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

யாரிடம் எப்படிப் பேச வேண்டும் என்று தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் - கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு நன்றாகவே சொல்லிக் கொடுத்துள்ளார்கள்.

சிலரிடம் அண்ணாவைப் போல சிலரிடம் கலைஞரைப் போல - சிலரிடம் கழகத்தலைவரைப் போல பேசுகிறோம். எனினும், குறிப்பிட்ட சிலரிடம், பெரியார் வழியில்தான் பேசியாக வேண்டியிருக்கிறது.

வெள்ள பாதிப்புக்காக கழக அரசு நிவாரண நிதி கேட்டால், "நாங்கள் என்ன ஏ.டி.எம்.ஆ?" என ஒன்றிய அமைச்சர் ஒருவர் கூறியதாக செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு, 'அவர் அப்பா வீட்டுப் பணத்தைக் கேட்கவில்லை. தமிழ்நாட்டு மக்கள் அளித்த வரிப்பணத்தைத்தானே கேட்கிறோம்" என்று கூறினேன்.

என் பேச்சில் மரியாதை சற்று குறைவாக இருந்ததாக அப்போது சிலர் வருத்தப்பட்டார்கள். அடுத்த நாளே, "மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் அவர்களுடைய அப்பா வீட்டுப் பணத்தைக் கேட்க வில்லை" என்று அவர்கள் கோரியபடியே மிகுந்த 'மரியாதையுடன்' கேட்டுக்கொண்டேன்.

ஆனாலும், ஒன்றிய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்கள், 'பாஷை' குறித்து இன்று பாடமெடுத்துள்ளார்கள்.

மீண்டும் சொல்கிறேன்; ஒன்றிய நிதியமைச்சர் திருமதி.நிர்மலா சீதாராமன் அவர்களின் 'மரியாதைக்குரிய' அப்பா வீட்டுப் பணத்தை நாம் கேட்கவில்லை. தமிழ்நாட்டு மக்கள் செலுத்திய வரிப்பணத்தில் இருந்து தமிழ்நாடு அரசு கோரிய பேரிடர் நிவாரண நிதியைத்தான் கேட்கிறோம்.

வழக்கமாக ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் மாநில பேரிடர் நிவாரண நிதியைத் தந்து விட்டு, ஏதோ ஒன்றிய அரசின் தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து தந்தது போல அடித்துப் பேச வேண்டாம்.

நாங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் 'மரியாதை' தருவதற்குத் தயாராகவே இருக்கிறோம் - தமிழ்நாட்டு மக்கள் மீது கொஞ்சமாவது 'அக்கறை' வைத்து நிதியைத் தாருங்கள் மரியாதைக்குரிய மாண்புமிகு ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களே!

இவ்வாறு, அப்பதிவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## தென் மாவட்ட மக்களை மீட்டெடுப்பதில்

# தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் செயல்படுகிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, டிச. 24 -

கன மழையால் பாதிக்கப்பட்ட தென் மாவட்டங்களை மீட்டெடுக்கும் பணிகளை தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருவது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

பெருமழையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள தென் மாவட்ட மக்களின் உடல்நலனை உறுதி செய்திட மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் 2,500க்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதேபோல் உழவர்களின் வாழ்வாதாரங்களை மீட்டெடுத்து அவர்களது நலன் காத்திட வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் களப்பணியில் ஈடுபட்டுள்ளார்.

அதோடு 6 நாட்களாக 10 பொறுப்பு அமைச்சர்களும், நாடாளுமன்ற/ சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் களத்தில் இருந்து மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதை உறுதிசெய்து வருகின்றனர்.

தலைமைச் செயலாளர் அவர்களும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் தங்கி யிருந்து அரசு அதிகாரிகளுடன் இணைந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து வருகிறார். தென் மாவட்ட மக்களை மீட்டெடுப்பதில் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## 50வது நினைவு தினம்: சென்னை அண்ணா சாலையில் உள்ள

# தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு - இன்று கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை!

## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் - பொருளாளர் டி.ஆர்.பாலு - முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, டிச.24-



பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 50வது நினைவு நாளான இன்று (24.12.2023 ஞாயிற்றுக்கி ழமை) காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா சாலையில் (சிம்சன் அருகில்) அமைக்கப் பட்டுள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.



டிசம்பர் 24
கலைஞர் 100 1924 - 2023
தந்தை பெரியாரின் நினைவைப் போற்றுவோம்
எங்கள் மொழி மீது அவர்களின் ஆணவ பாஷை
ஆதிக்கம் செலுத்தப் பார்க்கிறபோதெல்லாம்
பெரியாரின்
கைத்தடி தயாராகவே இருக்கும் !
பேரன்புடன்
வழக்கறிஞர்
இரா.ராஜீவ்காந்தி
கழக மாணவரணி தலைவர்

## தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞரின் கனவு நிறைவேறவே, மகளிர் சுய உதவிக் குழுக்கள்!

# நடப்பாண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.30 ஆயிரம் கோடி கடனுதவி !

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!



கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் சார்பில் சென்னை – காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களைச் சேர்ந்த 1,827 நகர்ப்புர மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 23,472 மகளிர்களுக்கு ரூ.125.50 கோடி மதிப்பிலான வங்கி கடன் இணைப்பை வழங்கினார்.

**சென்னை, டிச. 24 -**

**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கனவினை நிறைவேற்றவே மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன என்றும் நடப்பாண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.30 ஆயிரம் கோடி கடனுதவி வழங்கப்படும் எனவும், சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 23,472 பேருக்கு வங்கி கடன் இணைப்பு வழங்கும் விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் சார்பில், சென்னை காஞ்சிபுரம் திருவள்ளூர் செங்கல்பட்டு மாவட்டங்களைச் சேர்ந்த 1,827 நகர்ப்புர மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 23,472 சகோதரிகளுக்கு ரூ.125.50 கோடி மதிப்பிலான வங்கி கடன் இணைப்பு வழங்கும் விழா நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு கடன் இணைப்பு வழங்கி வாழ்த்திப்பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது :

“பொருளாதாரச் சுதந்திரமே உண்மையான பெண் விடுதலைக்கு அடித்தளம். இதனை உணர்ந்து, எப்போதெல்லாம் கழக ஆட்சி அமைகின்றதோ அப்பொழுதெல்லாம், நம்முடைய திராவிட மாடல் அரசு மகளிர் மேம்பாட்டுக்கான திட்டங்களைத் தொடர்ந்து தந்து வருகின்றது.

வீட்டுக்குள் முடங்கி இருந்த பெண்களை வகுப்பறைக்குக் கொண்டு வந்தது திராவிட இயக்கம்.

100 ஆண்டுகளுக்கு முன்பு பெண்களுக்கு வாக்குரிமை கிடையாது. அந்த வாக்குரிமையைப் பெற்றுத் தந்தது, நமது திராவிட இயக்கத்தின் தொடக்கப் புள்ளியான நீதிக் கட்சி. பெண் விடுதலையைப் பெண்களிடத்தில் இருந்து யோசித்தவர்கள் என்றால், அது நம்முடைய தலைவர்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

### பெண்களுக்காக போராடியவர் பெரியார்!

அதனால்தான் பெரியார் அவர்கள் பெண்களுக்குக் கலாசாரம் என்ற பெயரிலும், சமூகம் என்ற பெயரிலும், சட்டம் என்ற பெயரிலும் இருந்த தடைகள் என்ன, என்று விவரித்துச் சொன்னார்கள். அந்த மூன்று தடைகளும் உடைபட வேண்டும் என்றால், பெண்கள் பொருளாதாரச் சுதந்திரம் பெற வேண்டும் என்று போராடியவர்தான் தந்தை பெரியார். அதேபோல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதன்முறையாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்த போதுதான் `ஆணுக்குப் பெண் சரிசமம் நிகர்’ என்பதை உணர்த்த சுய மரியாதைத் திருமணங்களை சட்டபூர்வமாக்கினார்.

அவர்கள் நாட்டிலேயே முதன் முறையாகப் பெண்களுக்குச் சொத்திலே சம உரிமை என்று அறிவித்து, அதற்கான சட்டத்தைக் கொண்டு வந்தவர் நம்முடைய முத்தமி ழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். அதேபோல கட்டணமில்லா கல்வி, உள்ளாட்சியில் இட ஒதுக்கீடு என மகளிருக்குக் கலைஞர் தந்த திட்டங்களைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் வந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு நாடே போற்றுகின்ற வகையில், கலைஞர் மகளிர் உரிமை திட்டம் செயல்படுத்தி வருகிறார்கள். ஒவ்வொரு மாதமும் கிட்டத்தட்ட ஒரு கோடியே 14 லட்சம் மகளிர், மாதம் 1,000 ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பெற்று வருகின்றார்கள்.

### தமிழ்நாட்டு முதல்வரை பின்பற்றும் மாநிலங்கள்!

இந்தியாவிலே முதன்முறையாக தேர்தல் அறிக்கைகளில் சொன்ன வாக்குறுதி மகளிருக்குக் கட்டணம் இல்லாப் பேருந்து வசதி திட்டத்தை அறிவித்தவரும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான். இப்போது அந்தத் திட்டத்தைப் பல மாநிலங்கள் பின்பற்றி வருகின்றன. பெண் கல்விக்கு, புதுமைப்பெண் திட்டம் வாயிலாக, அரசுப் பள்ளியில் படித்து, எந்தக் கல்லூரிக்கு சென்று படித்தாலும் அவர்களின் வங்கிக் கணக்கில் கல்வி ஊக்கத்தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

அதேபோல மகளிர்க்கு பெரிதும் உதவுகின்ற இன்னொரு திட்டம் ‘முதலமைச்சரின் காலை சிற்றுண்டித் திட்டம்’. முன்பெல்லாம் வேலைக்குச் செல்கின்ற பெற்றோர்கள் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி விட்டுச் சோகமாக இருப்பார்கள். பிள்ளைகள் காலை 8 மணிக்கெல்லாம் கிளம்பி, பள்ளிக்குச் சென்று விட வேண்டும். பள்ளிக்கூடத்திற்குச் சென்ற பையன் சாப்பிட்டானோ பசியோடு இருப்பானே என்று பெற்றோர்கள் யோசித்துக் கொண்டே இருப்பார்கள்.

ஆனால், இப்பொழுது நம்முடைய அரசு ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய அனைத்து குழந்தைகளுக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். இப்பொழுது அனைத்து பெற்றோர்களும், தைரியமாகவும் சந்தோஷமாகவும் தங்களுடைய குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறார்கள். இப்படிப் பல்வேறு திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை 1989 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் தான் தொடங்கி வைத்தார்கள். அதனை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குப் பார்த்து பார்த்து வளர்த்தெடுத்து வருகின்றார்கள். அதற்கு உதாரணம், இந்த ஒரு நிகழ்ச்சியே போதும். தர்மபுரியில் அன்றைக்குப் போடப்பட்ட அந்த விதை, இன்று தமிழ்நாடு எங்கும் வளர்ந்து சுமார் ஐந்து லட்சம் மகளிர் குழுக்களாக இன்று வளர்ந்து நிற்கின்றது.

உங்களுக்குள்ளாகவே ஒரு சேமிப்பை மேற்கொண்டு அதன் மூலம் ஒரு நிதி ஆதாரத்தை உருவாக்கி, பிறகு கடன் உதவிகளைப் பெற்று பயனடைகின்ற வகையில் உருவாக்கப்பட்ட இந்தத் திட்டம் இன்றைக்கு இந்தியாவிற்கே வழிகாட்டிக் கொண்டிருக்கிறது. மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குக் கடனுதவி வழங்கி துணை நிற்பது என்பதற்கு இந்த அரசு ஒருபோதும் தயங்கியது கிடையாது.

### கடந்த ஆண்டு ரூ.28 ஆயிரம் கோடி கடன்!

இன்றைக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட அதிகமாக மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்குக் கடன் இணைப்புகளை வழங்கி வருகின்றோம். கடந்த நிதி ஆண்டில் மட்டும் 28,000 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கிய அரசுதான் நம்முடைய திராவிட மாடல் அரசு. இந்த வருடம் அதைத் தாண்டி இந்த நிதி ஆண்டில் 30 ஆயிரம் கோடி ரூபாய் நிதி, கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இன்று வரை 22 ஆயிரம் ரூபாய் அளவுக்கு கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு முடிவதற்குள் மீதமுள்ள கடன் இணைப்பும் விரைவில் உங்களை வந்தடையும். அந்த இலக்கை நாங்கள் நிச்சயம் தொட்டு விடுவோம். மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் கடனைப் பெற்று அதனைத் திருப்பிச் செலுத்துபவர்களாக மட்டும் இருக்கக் கூடாது. மகளிர் அந்தக் கடனுதவி மூலம் வாழ்வில் அடுத்த நிலைக்குச் செல்லவும், இந்த அரசு எப்பொழுதும் உங்களுக்குத் துணை நிற்கும்.

அதனால்தான் மகளிர் தொழில் முனைவோராக வரவேண்டும் என்று நாம் அனைவரும் உழைத்து வருகின்றோம். இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாம்பலம் பகுதி அளவிலான கூட்டமைப்பின் கீழ் அந்தப் பகுதியைச் சேர்ந்த 35 சுயஉதவி குழுக்களைச் சேர்ந்த 455 உறுப்பினர்கள் இணைந்துள்ளனர்.

இந்தக் கூட்டமைப்பு சிறு வங்கி போல செயல்பட ஏதுவாக ரூபாய் ஒரு கோடியே 48 லட்சம் ரூபாய் கடன் இணைப்பு இன்று வழங்கப்பட்டுள்ளது. உங்களுக்கு என்னுடைய வாழ்த்துகள்.

இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் சென்னை பல்லாவரத்தைச் சேர்ந்த டாக்டர் அம்பேத்கர் மகளிர் சுயஉதவி குழுக்களின் சகோதரிகள் தனித்தனியாக துணி வியாபாரம், மளிகைக் கடை, மீன் வியாபாரம், மசாலாப் பொருட்கள் விற்பனை போன்ற தொழில்களைச் செய்து வருகின்றீர்கள். உங்களுக்கு இங்கே ரூபாய் 15 லட்சம் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது உங்கள் தொழில் சிறக்க உதவியாக இருக்கும். உங்களுக்கும் என்னுடைய வாழ்த்துகள். ஆவடி மாநகராட்சி, திருமலை ராஜபுரம் பகுதியைச் சேர்ந்த சாலையோரம் வியாபாரம் செய்யும் 12 சகோதரிகளை ஒருங்கிணைத்து `அட்சயா மகளிர் சுயஉதவிக்குழு’ தொடங்கப்பட்டது.

இந்தச் சகோதரிகள் தங்களுடைய வியாபாரத்திற்காக வெளியில் அதிக அளவில் வட்டிக்குக் கடன் வாங்கி வந்த நிலையில், நம்முடைய மையம் மூலம் முறையே ஐம்பதாயிரம் ரூபாய் முதல் 4 லட்சம் ரூபாய் வரை கடன் பெற்று தொழிலைப் பெருக்கிக் கொண்டு உள்ளீர்கள். இன்றைக்கு உங்களுக்கு 20 லட்சம் ரூபாய் கடன் இணைப்பாக வழங்கப்படுகின்றது.

இந்தத் தொகை உங்களுடைய தொழிலை மேலும் வலப்படுத்தும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு உள்ளது. இன்றைக்கு மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ஏராளமான பொருட்களைத் தயார் செய்து வருகின்றீர்கள்.

### மகளிர் குழுக்களுக்கு விற்பனை அரங்கம்!

நான் பல மாவட்டங்களுக்கு எந்த மாவட்டத்திற்குச் சுற்றுப்பயணம் செல்லும்போதும் ஆய்வுக்காக அங்கே இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் நீங்கள் அமைக்கின்ற அந்த அரங்குகளுக்கு வந்து, நீங்கள் தயார் செய்கின்ற இந்தப் பொருட்களை எல்லாம் தொடர்ந்து பார்வையிட்டு வருகின்றேன்.

அரசு நிகழ்ச்சிகளில் மட்டுமல்ல, எங்களுடைய கட்சி நிகழ்ச்சிகளிலும் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் பொருட்களை விற்பனை செய்வதற்கான அரங்குகளையும் நாங்கள் அமைத்துக் கொடுத்திருக்கின்றோம்.

சமீபத்தில், சட்டமன்றத்திலும் பேசினேன். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் நான் வேண்டுகோள் வைத்தேன். யார் பிறந்தநாளாக இருக்கட்டும். எந்த ஒரு நல்ல நாளாக விழா நிகழ்வாக இருக்கட்டும் பரிசுகள் கொடுக்கும்போது அவர்களுக்கெல்லாம் ஒரு வேண்டுகோள் வைத்தேன். அனைவருக்கும் பரிசுகள் கொடுக்கும்போது இந்த மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயார் செய்கின்ற பொருட்கள் தரமான பொருட்களாக இருக்கின்றது. அவங்களுக்கு உதவுகின்ற வகையில், ஒவ்வொருத்தர் அந்தப் பொருட்களை வாங்கிப் பரிசு கொடுங்கள் என்று சட்டமன்றத்திலே பேசி இருந்தேன்.

சமீபத்தில், என்னுடைய பிறந்தநாள் விழாவில்கூட, `தயவுசெய்து மகளிர் குழுக்கள் தயாரிக்கின்ற பொருட்களைப் பரிசாகக் கொடுங்கள்’ என்று வேண்டுகோள் வைத்தேன். இன்னும் சொல்லப்போனால், நான் தொடர்ந்து நீங்கள் தயாரிக்கின்ற பொருட்களைத்தான் உபயோ கித்துக் கொண்டு வருகின்றேன்.

என்னுடைய வீட்டில் எங்குப் பார்த்தாலும், நீங்கள் தயாரிக்கின்ற அந்தப் பொருட்கள்தான். என்னுடைய வீட்டில் மட்டுமல்ல, நம்முடைய முதலமைச்சரின் வீட்டிலும் எங்குப் பார்த்தாலும் நம்முடைய மகளிர் சுய உதவிக்குழுக்களாகிய நீங்கள் தயாரிக்கின்ற பொருட்கள்தான். சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்தேன். அதைத்தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றோம்.

நீங்கள் பொருட்களைத் தயாரிக்கின்ற போது அதை சந்தைப்படுத்துவதற்கும் நம்முடைய அரசு துணை நிற்கின்றது. கிராமப் பகுதிகளில் நீங்கள் தயாரிக்கும் பொருட்களை நகரங்களில் வந்து விற்பனை செய்ய வேண்டும் என்ற நோக்கில்தான்.

### பூமாலை வணிக வளாகங்கள்!

சமீபத்தில் பூமாலை வணிக வளாகங்கள் எல்லாம் புனரமைக்கப்பட்டு, சீரமைக்க ப் பட்டு, அவை உங்களுடைய பயன்பாட்டுக்காகத் திறந்து வைக்கப்பட்டன. அதையெல்லாம் நீங்கள் பயன்படுத்துமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

உற்பத்தியாளர், சந்தையாளர் கூட்டத்தை, திருச்சியில் சில மாதங்களுக்கு முன்பு நடத்தி முடித்தோம். அந்தக் கூட்டம் உங்களுடைய பொருட்களைச் சந்தைப்படுத்த பெரிதும் உதவுகின்றது என்று நம்புகின்றோம்.

இணையத்தின் வாயிலாகவும் நீங்கள் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில், `மதி சந்தை’ என்னும் இணையதளம், மதி சந்தை மொபைல் அப்ளிகேஷன் போன்றவற்றையும் நாங்கள் தொடங்கி வைத்துள்ளோம். எனவே, இந்த அரசு உங்களின் ஒவ்வொரு கட்ட வளர்ச்சியிலும் துணை நிற்கும்.

மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த நீங்கள், ஒவ்வொருவரும் வாழ்வில் முன்னேற்றம் அடைய உங்களுக்குத் தேவையான அத்தனை வசதிகளையும் செய்து தர இந்த அரசு தயாராக இருக்கின்றது.

நான் அடிக்கடி சொல்வது போல, நம்முடைய முதலமைச்சர் அவர்களும் இந்த அரசும் உங்களுக்கான இந்தக் கடன் உதவியை வெறும் கடன் தொகையாகப் பார்ப்பதில்லை. அதற்கு மாறாக, உங்களுடைய உழைப்பின் மீது வைத்துள்ள நம்பிக்கை தொகையாகத்தான் பார்க்கின்றது, என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே, இங்கு கடனுதவி பெற்றுள்ள உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திவ்யதர்ஷினி, நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் செயல் இயக்குநர் ஸ்ரேயா பி.சிங் உள்பட பலர் கலந்துகொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், மாணவ/மாணவியர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்தா.மோ.அன்பரசன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வபெருந்தகை, முதன்மைக் கல்வி அலுவலர் வெ.வெற்றிச்செல்வி, திருப்பெரும்புதூர் பேரூராட்சி தலைவர் திருமதி.சாந்தி சதீஷ்குமார் ஆகியோர் உள்ளனர்.



இராயபுரம் மேற்கு பகுதி 52வது வட்டத்தில் வட்டச் செயலாளர் எஸ்.புகழேந்தி நிகழ்ச்சி ஏற்பாட்டில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட செட்டி தோட்டம் பகுதியில் 1000 பேருக்கு நிவாரண பொருட்களை சென்னை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.இளையஅருணா, ஐட்ரீம் இரா. மூர்த்தி எம்.எல்.ஏ,இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ் ஆகியோர் வழங்கினர்.உடன் மாவட்ட துணைச் செயலாளர் மு.கோபி, நா.சண்முகம், ராஜேந்திரன், கீதாசுரேஷ் எம்.சி, வட்டக் கழக செயலாளர்கள் கொரியர் முருகன், ஜெ.கௌரிஸ்வரன் மற்றும் எம்.கே. இஸ்மாயில், மலையம்மாள்,இ.மதன், ஆ.வேளாங்கண்ணி, எம்.இளங்கோவன், எம்.பன்னீர்செல்வம், மலர் எஸ்.வினோத்குமார், கயல்விழி,தரணி, எம்.ஸ்ரீகார்த்திகேயன், டி.பி.சுரேகா,ஹரிஷ், எம்.தனஞ்செழியன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



பாளையங்கோட்டை மனக்காவலன் பிள்ளை நகரில் நேற்று (23.12.2023) நடைபெற்ற மருத்துவ முகாமினை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர்மு.அப்பாவு தலைமையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கினார்கள். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் ககன் தீப் சிங் பேடி, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவ கல்வி இயக்குநர் மரு.சங்குமணி, பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர்அப்துல் வகாப், திருநெல்வேலி மாநகராட்சி மேயர்பி.எம்.சரவணன் உட்பட பலர் உள்ளார்கள்.

### சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில்

# திருநெல்வேலி மாவட்ட மருத்துவக் கல்லூரி - மருத்துவமனையில் ஆய்வு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் மேற்கொண்டார்!

சென்னை, டிச.24-

திருநெல்வேலி மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையினை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் ஆய்வு செய்தார்.

திருநெல்வேலி மாவட்டம், அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனை, பாளையங்கோட்டை அரசு சித்தா மருத்துவமனை மற்றும் பல்வேறு இடங்களில் நடைபெற்று வரும் மருத்துவ முகாம்களை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர், ககன் தீப் சிங் பேடி, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப. கார்த்திகேயன், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவ கல்வி இயக்குநர் மரு.சங்குமணி, பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வகாப், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி.ஆர்.மனோகரன், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன் ஆகியோர் முன்னிலையில் நேற்று (23.12.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த 17.12.2023 மற்றும் 18.12.2023 அன்று பெய்த கனமழையினால் அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையில் தண்ணீர் வந்துள்ள இடங்களில் மீண்டும் தண்ணீர் உட்புகாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும், சிகிச்சை மேற்கொள்ளும் நோயாளிகளிடம் குடிநீர், உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்ததோடு, நோயாளிகளை பரிசோதனை செய்யப்படும் ஸ்கேன் மற்றும் அதி தீவிர சிகிச்சை பிரிவு உள்ளிட்டவைகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பார்வையிட்டு, ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் பெய்த கனமழையினால் பாதிக்கப்பட்ட இடங்களில் மீட்பு பணிகள் தொடர்ச்சியாக ஒரு வார காலமாக மேற்கொள்ளப்பட்டு, பல இடங்களில் இயல்பு நிலை திரும்பப்பட்டுள்ளது. குறிப்பாக தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இயல்பு நிலை திரும்பப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் படிப்படியாக மக்கள் இயல்பு நிலைக்கு மாறி உள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இன்னும் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை குறித்தும், பொதுமக்களின் நலன்கருதி ஏற்பட்டுள்ள மருத்துவ முகாம்கள் குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த வகையில் தூத்துக்குடி மாநகராட்சி மூன்றாவது மைல், ஸ்மார்ட் சிட்டி பேருந்து நிலையம், கீதா பள்ளி, குறிஞ்சி நகர் ஆகியவற்றையும், ஊரகப்பகுதிகளான கூட்டாங்குழி, சுப்பிரமணியபுரம், நட்டாத்தி, மங்கலக்குறிச்சி, ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி, ஏரல் காயல்பட்டிணம், ஆத்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலுள்ள மருத்துவமனைகளுக்கு நேரடியாக சென்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஒவ்வொரு மருத்துவ முகாமிலும் 100க்கும் மேற்பட்டவர்கள் பயன்பெற்று வருகின்றார்கள். 17.12.2023 முதல் 23.12.2023 வரை 2,682 மொத்த முகாம்களை வாயிலாக 95,124 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர். இதில் 864 பேர் காய்ச்சல்,2,565 பேர் சளி, இருமல் சிகிச்சை பெற்றுள்ளனர்.

**நடமாடும் மருத்துவ வாகனங்கள்!**

தொடர்ந்து, முதலமைச்சர் மருத்துவ முகாம்களை நீடித்திட வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில், நடமாடும் மருத்துவ வாகனங்களாக தூத்துக்குடியில் 93 வாகனங்கள், திருநெல்வேலியில் 31 வாகனங்கள், கன்னியாகுமரி 36 வாகனங்கள், தென்காசியில் 30 வாகனங்கள் என மொத்தம் 190 நடமாடும் மருத்துவ வாகனங்கள் செயல்பட்டு கொண்டிருக்கிறது.

தொடர்ந்து, இன்று (24.12.2023) மழையினால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி, திருவைகுண்டம், ஆழ்வார் திருநகரி, காயல்பட்டிணம், திருச்செந்தூர், கருங்குளம், உடன்குடி, சாத்தான்குளம் உள்ளிட்ட 50 இடங்களில் தனியார் மருத்துவமனைகளான வேலம்மாள் மருத்துவமனை, வடமலையான், மீனாட்சி மிஷன், அரிஸ்டோ, ஆசீர்வாதா, பாலா, தேவதாஸ் உள்ளிட்ட சுமார் 14 மருத்துமனைகளை ஒருங்கிணைத்து மெகா அளவிலான மருத்துவ முகாம்கள் நடைபெறவுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் சரிசெய்யப்பட்டுள்ளது. நான்கு மாவட்டங்களை பொறுத்தவரையில் 64 ஆரம்ப சுகாதார நிலையங்கள்,261துணை சுகாதார நிலையங்கள் பாதிக்கப்பட்டது. மேலும், 315 மருத்துவ கட்டமைப்புகள் பாதிக்கப்பட்டுள்ளது. அதனை சீரமைப்பதற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்து பொதுப்பணித்துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தொடர்ந்து, சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பாளையங்கோட்டை மனக்காவலன் பிள்ளை நகரில் நடைபெற்ற மருத்துவ முகாமினை ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கினார்.

மேலும், பாளையங்கோட்டை சித்தா மருத்துவக்கல்லூரியில் சிகிச்சை பிரிவுகள் மற்றும் புறநோயாளிகள் பிரிவினையும்,தெற்கு வள்ளியூர் ஊராட்சி நடைபெற்று வரும் மருத்துவ முகாமினையும், களக்காடு அரசு மருத்துவமனையில் மழைநீர் தேங்கி, தற்போது மறுசீரமைக்கப்பட்டதை பார்வையிட்டு, மருத்துவமனையிலுள்ள சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சேரன்மகாதேவி மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சை முறைகள் குறித்து பார்வையிட்டு, கேட்டறிந்தார்.

நடைபெற்ற ஆய்வில், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமனை முதல்வர் மரு.ரேவதி, இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.லதா ,துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.ராஜேந்திரன் முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன்கான், களக்காடு நகர்மன்ற தலைவர் திருமதி. சாந்தி சுபாஷ், பணக்குடி பேரூராட்சி தலைவர் திருமதி.தனலெட்சுமி, களக்காடு நகராட்சி துணைத்தலைவர் பி.சி.ராஜன், வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் சேவியர் செல்வ ராஜா, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பாஸ்கர், தெற்கு வள்ளியூர் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.முத்தரசி ரகுபால் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுரை ஏ.ஆர்.சந்திரன்

### டிசம்பர் 24 (2008)



பள்ளியில் படிக்கின்ற காலத்திலேயே பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் மீது தீவிரப் பற்றுக் கொண்டு கழகப் பணிகளில் ஈடுபட்டவர். கழக மாநாடுகள் அனைத்திலும் பங்கேற்றவர். மதுரை முத்துவுடன் சேர்ந்து கழகம் வளர்க்கப் பாடுபட்டவர்.

கழகம் தொடங்கிய காலத்தில் மதுரை வடக்கு மாசி வீதியில் “மறுமலர்ச்சி படிப்பகம்” என்ற படிப்பகத்தைத் தொடங்கி அதில் முரசொலி, நம்நாடு, திராவிட நாடு போன்ற ஏடுகளை வழங்கி கழகத் தோழர்களையெல்லாம் படிக்க வைத்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் வாழ்த்துகளுடன் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராக நியமிக்கப்பட்டு தலைவர் கலைஞர் அவர்களிடம் சிறந்த கூட்டுறவு வங்கி என்ற பாராட்டைப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில்

# தூத்துக்குடிக்கு நிவாரண உதவி பொருட்கள்!

சிவகங்கை, டிச. 24-

இம்மாதம் 17,18 தேதிகளில் தென் மாவட்டங்களான தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி, ஆகிய நான்கு மாவட்டங்களில் பெய்த பெரும்மழையினால் கடும் பாதிப்புகள் ஏற்பட்டது. இதில் தூத்துக்குடி மாவட்டத்தில் அதிகம் பாதிப்பு ஏற்பட்டது.

தூத்துக்குடி மாவட்ட மக்களுக்கு சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மாநில சுற்றுச்சூழல் அணிஅமைப்பாளர் சேனாதிபதி ஆகியோர் ஆலோசனையின் பேரில்மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் இரண்டரை டன் அரிசி, வேஷ்டி சேலை மற்றும் உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டது.

மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் அ. வல்லபாய் இந்த நிவாரண பொருட்களை வேனில் கொடியசைத்து அனுப்பி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட சுற்றுச்சூழல் அணித் தலைவர் எம்.கார்கண்ணன், துணை அமைப்பாளர்கள் மு.குமரன் , சாய் சுரேஷ் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### ‘உழுவார் உலகத்தார்க்கு ஆணி’

# உழவர்களுக்கு கழக அரசு உறுதுணையாக நின்று காக்கும்!

### தேசிய உழவர் நாளையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, டிச.24-**

**தேசிய உழவர்கள் நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில், “உழவர்களுக்கு கழக அரசு உறுதுணையாக நின்று காக்கும்” என்று குறிப்பிட்டுள்ளார்.**

தேசிய உழவர்கள் நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

"உழுவார் உலகத்தார்க்கு ஆணி" எனும் அளவில் உலகை உய்விக்கும் உயர்குடியாம் உழவர்கள் அனைவருக்கும் தேசிய உழவர்கள் நாள் வாழ்த்துகள்!



பெருமழையால் பயிர்களையும் கால்நடைகளையும் வாழ்வாதாரத்தையும் இழந்துள்ள உழவர்களுக்கு உறுதுணையாக நமது அரசு நின்று காக்கும்.

இவ்வாறு - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இ.கருணாநிதி ஏற்பாட்டில் பல்லாவரம் தொகுதியில் நிவாரண உதவிகள்!

# அனகாபுத்தூரில் 2000 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. வழங்கினார்!

பல்லாவரம், டிச.24-

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி, தாம்பரம் மாநகராட்சி பகுதிகளில் மிக்ஜாம் புயல் கனமழை வெள்ளத்தால் பல்லாவரம் தொகுதிகளில் பல்வேறு குடியிருப்பு பகுதிகள் முழுவதுமாக மழை நீரில் மூழ்கியது.

மழைநீர் சூழ்ந்ததால் பெரும்பாலான வீடுகள், கார்கள், இருசக்கர வாகனங்கள் என அனைத்தும் நீரில் மூழ்கின.

இதனால் பொதுமக்கள் வீட்டில் இருந்து வெளியே வர முடியாத நிலை ஏற்பட்டது.மழை வெள்ளநீர் சூழ்ந்த பகுதிகளில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அப்பகுதிகளில் இருந்து நல திட்ட பணிகளை மேற்கொண்டார்.

அனகாபுத்தூர் அடையார் ஓரமாக உள்ள பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்து இருந்ததால் அப்பகுதிகளில் படகுமூலம் சென்று மக்களுக்கு குடிதண்ணீர் பால் ரொட்டி மூன்று வேலை உணவு வழங்கினார். மழை நின்றதும் ராட்சத மோட்டார்கள் வைத்து மழை நீர் வெளியேற்றுவது மரங்களை வெட்டி உடனடியாக மின் சாரம் வழங்குவது போன்ற பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டன. அதைத் தொடர்ந்து அனகாபுத்தூரில் பாதிக்கப்பட்ட 500 குடும்பங்களுக்கு அரிசி பருப்பு, மளிகை சாமான்கள் பாய் போர்வை நிவாரண பொருட்கள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆறுதல் கூறி வழங்கினார்கள்.

அதைத் தொடர்ந்து குரோம்பேட்டை பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 2 ஆயிரத்துக்கும் மேற்பட் குடும்பங்களுக்கு கழக நாடாளுமன்ற தலைவரும் கழகப் பொருளாளருமான டி.ஆர்.பாலு அவர்கள் வழங்கினார்.

அதைத் தொடர்ந்து 2000 குடும்பங்களுக்கு க.பொன்முடி வழங்கினார். அதைத் தொடர்ந்து 3000 மேற்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குரோம்பேட்டை பல்லாவரம் பம்மல் ஆகிய பகுதிகளில் அமைச்சர்கள் தாமோ. அன்பரசன், இரா. சக்கரபாணி ஆகியோர் வழங்கினார்கள்.

மேலும் நெமிலிச்சேரி பழைய பல்லாவரம் ஆகிய பகுதிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் கருணாநிதி வழங்கினார். தொகுதி முழுவதும் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு தொடர்ந்து நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. அதையும் தொடர்ந்து 21-12-2023 அன்று சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி தலைமையில் அனகாபுத்தூரில் 2000 குடும்பங்களுக்கு கழக நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் வழங்கினார்.

அப்பொழுது மண்டலக் குழு தலைவர் வே.கருணாநிதி மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

### ‘ஒரே தேசம், ஒரே மக்கள்’ என குரல் கொடுப்போர் இழிவாக நடக்கலாமா?

# ஒன்றிய அரசின் பாராமுகம் தமிழ்நாட்டை வஞ்சிப்பதாக உள்ளது!

## ‘தினகரன்’ நாளேடு கண்டனம்!

சென்னை, டிச. 24 -

‘ஒரே தேசம், ஒரே மக்கள்’ என குரல் கொடுப்போர் இழிவாக நடக்கலாமா? என்றும் வெள்ள நிவாரண நிதி ஒதுக்காத ஒன்றிய அரசின் பாராமுகம் தமிழ்நாட்டை வஞ்சிப்பதாக உள்ளது என ‘தினகரன்’ நாளேடு கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து 23.12.2023 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-



தினகரன்
டிசம்பர் 23, 2023 சனிக்கிழமை
ஏன் இந்த பாராமுகம்?
தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களான தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கடந்த 17 மற்றும் 18ம் தேதிகளில் வரலாறு காணாத அளவுக்கு அதி கனமழை கொட்டித்தீர்த்தது. மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது. சாலைகள் துண்டிக்கப்பட்டு, பல கிராமங்கள் தீவுகளாக மாறின. வீடுகளுக்குள் முடங்கிய மக்கள், 3 நாட்களாக உணவு, குடிநீர் இன்றி தவித்தனர். நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் மழை பாதிப்புகளை பார்வையிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், மக்கள் படும் துயரத்தை பார்த்து கண் கலங்கினார்.

தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களான தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கடந்த 17 மற்றும் 18ம் தேதிகளில் வரலாறு காணாத அளவுக்கு அதி கனமழை கொட்டித்தீர்த்தது. மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது. சாலைகள் துண்டிக்கப்பட்டு, பல கிராமங்கள் தீவுகளாக மாறின. வீடு களுக்குள் முடங்கிய மக்கள், 3 நாட்களாக உணவு, குடிநீர் இன்றி தவித்தனர். நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் மழை பாதிப்புகளை பார்வையிட்ட முதல்வர் மு.க. ஸ்டாலின், மக்கள் படும் துயரத்தை பார்த்து கண் கலங்கினார். “நெல்லை, தூத்துக்குடியில் கனமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்ப அட்டை தாரர்களுக்கு ரூ. 6 ஆயிரம் நிவாரணமாக வழங்கப்படும். தென்காசி, கன்னியாகுமரியில் பாதிப்புகளின் அடிப்படையில் நிவாரணம் வழங்கப்படும். கன்னியாகுமரி, தென்காசி மாவட்ட மக்களுக்கு ஆயிரம் வெள்ள நிவாரணமாக வழங்கப்படும்” என்பது உள்ளிட்ட பல அறிவிப்புகளை வெளியிட்டார்.

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய 4 மாவட்ட மக்களை மிக்ஜாம் புயல் புரட்டிப் போட்ட வடு காயும் முன் நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்ட மக்களை மழை மூழ்கடித்து விட்டது.

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, ரேஷன் கார்டு வாரியாக தலா ரூ.6 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 90 சதவீதம் பேருக்கு இந்த நிவாரணம் வழங்கப்பட்டு விட்டது. சென்னையில் மட்டும் 4.90 லட்சம் பேர் இந்த நிவாரணத் தொகை கேட்டு விண்ணப்பித்துள்ள னர். கடுமையான நிதி நெருக்கடிக்கு மத்தியிலும், முதல்வர் மு.க. ஸ்டாலின், தென்மாவட்ட மக்களை கைவிடமாட்டேன் என உறுதி எடுத்து, நிவாரண தொகை விவரத்தை அறிவித்து, விநியோகிக்க உத்தரவிட்டுள்ளார்.

தலைநகரை சுற்றியுள்ள 4 மாவட்டங்கள், தென் தமிழ்நாட்டில் 4 மாவட்டங்கள் என மொத்தம் 8 மாவட்ட மக்களின் இயல்பு நிலை அடியோடு பாதிக்கப்பட்ட பின்னரும், இந்த துயரத்தை, ஒன்றிய அரசு இதுவரை பேரிடராக அறிவிக்க வில்லை. அதற்கான நிதியும் ஒதுக்கவில்லை. மக்களை சமாதானப்படுத்த வேண்டும் என்ற நோக்கில், கண் துடைப்புக்காக ஒன்றிய குழு ஆய்வு செய்து வருகிறது. தேச ஒற்றுமை, ஒருமைப்பாடு பற்றி பேசும் பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் தமிழ்நாடு பாதிப்பு பற்றி துளியும் கண்டுகொள்ளவில்லை. தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள 8 மாவட்ட பாதிப்பு நிலவரம் பற்றி, முதல்வர் மு.க.ஸ்டாலின், புதுடெல்லியில் பிரதமர் மோடியிடம் சுமார் அரை மணி நேரம், நேரில் எடுத்துக்கூறியுள்ளார்.

ஆதாரங்களை சமர்ப்பித்துள்ளார். அதன்பிறகும், ஒன்றிய அரசின் நிவாரண நிதி இன்னும் வந்து சேரவில்லை. ஒன்றிய அரசின் பாராமுகம், தமிழ்நாட்டை வஞ்சிப்பதாகவே உள்ளது. இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறுவது, அவர்களுக்கு உறுதுணையாக இருப்பது, ஆட்சியாளர்களுக்கு அழகு. ஆனால், ஒன்றிய அரசின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், ஜென்ம பகை கொண்டதுபோல், தமிழ்நாடு மக்களை இழிவுபடுத்தும் வகையில் “இந்த துயரத்தை கடும் பேரிடராக அறிவிக்க இயலாது” என வெளிப்படையாக கூறுகிறார். “ஒரே தேசம், ஒரே மக்கள்” என குரல் கொடுக்கும் அவர், தமிழ்நாடு மக்களை நான்காம் தர குடிமக்கள் போல் பாவிப்பது ஏன்? துயர் துடைக்காவிட்டா லும், ஒட்டுமொத்த தமிழ் மக்களை இழிவுபடுத்தலாமா? வெந்த புண்ணில் வேல் பாய்ச்சலாமா? இதற்கு பழி தீர்க்கும் வகையில், வரும் நாடாளுமன்ற தேர்தலில், ஒட்டுமொத்த தமிழ்மக்களும் வாக்குச்சீட்டை கையில் எடுக்கும் காலம் நெருங்கிவிட்டது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 அனகாபுத்தூர் பகுதியில் மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். அப்பொழுது மண்டல தலைவர் வே. கருணாநிதி, பகுதி செயலாளர் த. ஜெயக்குமார், மாமன்ற உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (23.12.2023) தலைமைச் செயலகத்தில், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத் தேர்தலில் வெற்றி பெற்ற புதிய நிர்வாகிகள் தலைவர் ஜி. மோகனகிருஷ்ணன், துணைத் தலைவர் எஸ். அறிவழகன், செயலாளர் கிருஷ்ணகுமார், பொருளாளர் ஜி. ராஜேஷ், நூலகர் வி.எம். ரகு, செயற்குழு உறுப்பினர் ஏ. ரமேஷ், உறுப்பினர்கள் ஏ. இந்தியன், கே.சுப்பிரமணியன், வி.இ. அனிஷ்குமார், திருமதி வி. கயல்விழி, ஜி. முத்துகுமரன், எம்.வி. சதீஷ்குமார், ஏ.எம். நடராஜ் ஆகியோர் சந்தித்து, வாழ்த்துப் பெற்று, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் நாடாளுமன்ற உறுப்பினரும் மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன் உள்ளார்.

# தூத்துக்குடி மாவட்டத்தில் மழை வெள்ள பாதிப்பு!

## தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா நேரில் ஆய்வு செய்தார்!

தூத்துக்குடி, டிச. 24-

தூத்துக்குடி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் நிவாரணப்பணிகளை தலைமைச்செயலாளர் சிவ்தாஸ்மீனா பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்த அதி கன மழை காரணமாக மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. தமிழ்நாடு அரசு மேற்கொண்ட தொடர் நடவடிக்கையால் தண்ணீர் வடிந்து பல பகுதிகளில் இயல்புநிலை திரும்பியுள்ளது. ஒருசில தாழ்வான பகுதிகளில் உள்ள குடியிருப்பு வீடுகள் மற்றும் விவசாய நிலங்களில் தேங்கியுள்ள மழை நீரை அகற்றும் பணியில் மாநகராட்சி ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ராட்சத மோட்டார்கள் மூலம் தண்ணீரை வெளியேற்றும் பணி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் தூத்துக்குடி மாவட்டத்தில் நடைபெற்று வரும் மீட்புப் பணிகளை தலைமைச் செயலாளர் சிவ்தாஸ்மீனா பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மறவன் மடம் , முத்தம்மாள் காலனி கருத்த பாலம் உள்ளிட்ட முக்கிய பகுதிகளை தலைமைச் செயலாளர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து குறிஞ்சி நகர் பகுதியைச் சுற்றியுள்ள தெருக்களில், சூழ்ந்து நிற்கும் தண்ணீரை வெளியேற்ற எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை அவர் பார்வையிட்டார். குறிஞ்சிநகர் பகுதியில் தண்ணீர் தேங்காத வகையில் மழைநீர் வடிகால் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வடிகால் அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கும் என்றும் தலைமைச்செயலாளர் சிவ்தாஸ் மீனா தெரிவித்தார்.

---

### மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட

# இராயபுரம் 52-வது வட்டத்தில் 1000 பேருக்கு நல உதவிகள்!

## தா. இளைய அருணா - ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ. வழங்கினர்!

சென்னை, டிச. 24 -

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கினங்க, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டு தலின்படி, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி ஏற்பாட்டில், இராயபுரம் தொகுதி 52வது வட்டம் செட்டித் தோட்டம் பகுதியில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் சுமார் 1000 பேருக்கு 5 கிலோ அரிசி, பெட்ஜீட் , லுங்கி, பிஸ்கெட், தண்ணீர் பாட்டல் உள்ளிட்ட பொருட்களை சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா ஆகியோர் பொதுமக்களுக்கு வழங்கினர்.

இந்நிகழ்வில் பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், மாமன்ற உறுப்பினர் கீதா சுரேஷ், வட்ட செயலாளர் புகழேந்தி, வட்ட செயலாளர்கள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் பங்கேற்றனர்.

---

### கழக மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

# எண்ணூர் கத்திவாக்கம் 2வது வட்டத்தில் நிவாரணப் பொருள்கள்!

## இ.ரமேஷ் தலைமையில் - கோமதி சந்தோஷ்குமார் - பிரட் சுரேஷ் வழங்கினர்!

சென்னை, டிச.24-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி மிக்ஜாம் புயல் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி எண்ணூர் கத்திவாக்கம் 2வது வட்டம் ராம் மூர்த்தி நகர், பத்ரகாளியம்மன் நகர், செல்வம் நகர், பகுதியில், வசிக்கும் 250 குடும்பங்களுக்கு கழக மாநில மீனவர் அணி துணைத் தலைவர் - திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் ஏற்பாட்டில் அரிசி, இருவகை பருப்பு, எண்ணெய், பெட்ஷீட், டவல், உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை முன்னாள் பகுதி துணைச் செயலாளர் இ.ரமேஷ், தலைமையில் 2வது வட்ட மாமன்ற உறுப்பினர் கோமதி சந்தோஷ் குமார், மாவட்ட வர்த்தக அணி துணைத் தலைவர் பிரட் சுரேஷ் வழங்கினர்.

இந்நிகழ்வில் மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் த.தேசப்பன், எம். இளங்கோவன், சுரேஷ், ராமமூர்த்தி நகர் கிராம தலைவர் சுந்தரேசன், ஆர்.எஸ்.ரோடு முருகன் மற்றும் கழகத் தோழர்கள், பொதுமக்கள்கள் கலந்து கொண்டனர்.

---

### வேளச்சேரி மேற்குப் பகுதியில்

# மாற்றுத் திறனாளிகள் - முதியோர்களுக்கு வீடு தேடி ரூ.6000 நிவாரணம்!

## ரேசன் கடை ஊழியர்கள் - கழகத்தினர் வழங்கினர்!

சென்னை, டிச. 24-

முதல்வர் மு.க. ஸ்டாலின்அவர்களால் அறிவிக்கப்பட்டு நியாய விலைக் கடைகளில் வழங்கப்பட்டு வந்த வெள்ள நிவாரண நிதியினை வாங்க இயலாத ஒரு நபர் கார்டுதார்களான முதியோர் மாற்றுத் திறனாளிகளுக்கு கழகத்தினரின் உதவியால் அவர்களின் இல்லத்திற்கே சென்று ஊழிகர்கள் முறைப்படி வழங்கினர்.

மக்கள் முதல்வர் அவர்களின் அறிவுறுத்தல்படி அரிமா சு.சேகர் (பகுதி செயலாளர் வேளச்சேரி மேற்கு), திருமதி. மகேஸ்வரி முருகவேல் (மாமன்ற உறுப்பினர்) க. பாரதிதாசன் (175வது வட்ட செயலாளர்) ஆகியோரின் வழிகாட்டலின்படி மிக்ஜாம் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூபாய். 6000 நிவாரண உதவித் தொகை பெற ரேஷன் கடைக்கு வருகை தர இயலாத மாற்றுத்திறனாளிகள், முதியோர்களுக்கு ரேஷன் கடை ஊழியர்களின் உதவியுடன் வேளச்சேரி மேற்கு பகுதி) 175 வது வட்ட கழக நிர்வாகிகள் சார்பில் வி.மனோகரன் (அவைத்தலைவர்), ஜி.இ. தணிகைவேல் (வட்ட பொருளாளர்) உ.சிவா (வட்ட பகுதி பிரதிநிதி) மற்றும் சதீஷ்குமார், விக்னேஷ் குமார் (செயற்குழு உறுப்பினர்கள்), ஆர்.லட்சுமணராவ் (பாக முகவர்) ஆகியோர் நேரில் சென்று நிவாரண உதவித் தொகையை வழங்கினார்கள். நிவாரண உதவித்தொகை பெற்றவர்கள் மனதார மக்கள் முதல்வரையும், தமிழக அரசையும் வெகுவாக பாராட்டினார்கள்.

---

### கோவை மாநகர் மாவட்ட தலைமை செயற்குழு, பொதுக்குழு முன்னாள் உறுப்பினரும் -

# திரைப்பட தயாரிப்பாளருமான கோவை முருகேசன் மறைவு!

## முதல்வர் – தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச. 24-

கோவை மாநகர் மாவட்ட தலைமை செயற்குழு, பொதுக்குழு முன்னாள் உறுப்பினரும் - திரைப்பட தயாரிப்பாளருமான கோவை முருகேசன் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

அவரது இரங்கல் செய்தி வருமாறு:

கோவை மாநகர் மாவட்ட தலைமை செயற்குழு, பொதுக்குழு முன்னாள் உறுப்பினரும் திரைப்பட தயாரிப்பாளருமான கோவை முருகேசன், நேற்று (23.12.2023) இயற்கை எய்தினார் என்பதை அறிந்து வருந்துகிறேன். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும் கழகத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்த அதிகனமழை காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள், மற்றும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை நேற்று (23.12.2023) நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, நேரில் சென்று ஆய்வு செய்தார்.

---



### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட்ட

### "உடன்பிறப்புகளாய் இணைவோம்"என்ற மாபெரும் முன்னெடுப்புடன்

### "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவள விழா ஆண்டு"

### புதிய உறுப்பினர் சேர்த்தல் பணிகள் முடிந்து

# புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் வழங்கல்!

## (இரண்டாம் கட்டம்!)

## தலைமைக் கழக அறிவிப்பு

இந்திய வரலாற்றில் ஜனநாயக முறைப்படி உறுப்பினர் சேர்த்தலும் புதுப்பித்தலுமான பணிகள் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து வார்டு கிளைகள், ஊராட்சி, பேரூர், ஒன்றிய, நகர, பகுதி, நகரிய, மாவட்ட, மாநகர் மாவட்ட, மாநில அமைப்புகள், தலைமைக் கழகம் ஆகியவற்றுக்கு தேர்தல் நடத்தி, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்து அமைப்புக்களை செயற்படுத்தும் கட்சி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நாடறியும். ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 140 வார்டு கழகங்களையும், 1 கோடியே 10 இலட்சத்திற்கு மேல் உறுப்பினர்களையும் கொண்ட தி.மு.கழகம்.

"தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் அரை நூற்றாண்டு காலம் கட்டி காத்த நம் கழகத்தை மேலும் வலிமைப்படுத்த, மேலும் ஒரு கோடி உறுப்பினர்கள் சேர்க்க "உடன்பிறப்புகளாய் இணைவோம்" என்ற மாபெரும் முன்னெடுப்பு கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட உள்ளது. ஏற்கனவே, ஒரு கோடி உறுப்பினர்களைக் கொண்ட பேரியக்கத்தில், புதிதாக மேலும் ஒரு கோடி உறுப்பினர்களைச் சேர்க்கும் பெருமுயற்சியை ஏப்ரல் 3 ஆம் தேதியன்று தொடங்கி, ஜீன் 3, 2023 தலைவர் கலைஞர் நூற்றாண்டு தொடங்குவதற்குள் இப்பணியை நிறைவேற்றுவதென இக்கூட்டம் நிறைவேற்றிடும் வகையில், துண்டறிக்கைகள் மூலமாகவும், திண்ணைப் பிரச்சாரங்கள் மூலமாகவும், முக்கிய இடங்களில் முகாம்கள் அமைப்பது மூலமாகவும், வீடு தோறும் தேடிச் சென்றும் புதிய உறுப்பினர்களைச் கழகத்தில் இணைத்திடுவோம்." என கழகத்

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், கடந்த 22.3.2023 அன்று நடைபெற்ற 'தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில்' நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி,

2023 ஏப்ரல் 3ஆம் தேதி முதல் 2023 ஜீன் 3ஆம் தேதி வரை, "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவளவிழா ஆண்டு" உறுப்பினர்களை சேர்த்தல் பணிகளை"உடன்பிறப்புகளாய் இணைவோம்" என்ற மாபெரும் முன்னெடுப்புடன் ஒரு கோடி புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. கழகத் தோழர்கள் மற்றும் நிர்வாகிகளும் மேற்குறிப்பிட்ட தேதி முதல் உறுப்பினர்களை சேர்க்கும் பணியினைத் தொடங்கி, உடனுக்குடன் படிவங்களை தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்தனர்.

அவ்வாறு தலைமைக் கழகத்தில் வரப் பெற்ற படிவங்கள் முறைப்படி பரிசீலனை செய்யப்பட்டு, புதியதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை தலைமைக் கழகம் தயாரித்துள்ளது.

முதற் கட்டமாக, தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட இரசீது எண். 1 முதல் எண்.1000 வரை இப்புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்கள் கடந்த

7-11-2023 முதல் 10-11-2023 தேதிகளில் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து;

தற்போது, இரண்டாவது கட்டமாக, **தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட இரசீது எண். 1001 முதல் 2100 வரை எண் கொண்ட இரசீதுகள்** வைத்திருப்போர் கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் இருக்குமேயானால், அந்த ஒரிஜினல் இரசீதையும், தங்களிடம் உள்ள உறுப்பினர் சேர்த்தல் பட்டியலையும், **2023 டிசம்பர் 27ஆம் தேதி முதல் 30ஆம் தேதிக்குள்**, தலைமைக் கழகத்திற்கு நேரில் வந்து, இரசீது எண்ணையும், பட்டியலையும் சரி பார்த்து பெற்றுச் செல்ல வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

புதிய உறுப்பினர்களை சேர்த்து பணம் செலுத்தி இரசீது பெற்றவர்கள், நேரில் வந்து உறுப்பினர் சீட்டுகள் பெற முடியாத நிலை ஏற்படுமாயின், அவர்களால் நியமித்து அனுப்பப்படும் முகவரிடம், தாங்கள் கைப்பட எழுதிய பரிந்துரை கடிதமும், ஒரிஜினல் இரசீதையும் கொடுத்து புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளலாம். இரசீதின் ஜெராக்ஸ் நகல் ஏற்றுக் கொள்ளப்படாது.

புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை, தலைமைக் கழகத்தில் பெற்றுக் கொண்டவர்கள், உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை உரியவரிடம் ஒப்படைத்து, அதற்குரிய அத்தாட்சி கடிதத்தை பெற்று, அக்கடிதத்தினை ஒருவார காலத்திற்குள் தலைமைக் கழகத்திற்கு கண்டிப்பாக அனுப்பி வைத்திட வேண்டும்.

### உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கப்படும் மாவட்டங்கள்
### தலைமைக் கழக இரசீது எண். 1001 முதல் 2000 வரை

1) சென்னை வடக்கு
2) சென்னை வடகிழக்கு
3) சென்னை கிழக்கு
4) சென்னை மேற்கு
5) சென்னை தென்மேற்கு
6) சென்னை தெற்கு
7) திருவள்ளூர் கிழக்கு
8) திருவள்ளூர் மேற்கு
9) காஞ்சிபுரம் வடக்கு
10) காஞ்சிபுரம் தெற்கு
11) விழுப்புரம் வடக்கு
12) கள்ளக்குறிச்சி தெற்கு
13) கடலூர் கிழக்கு
14) கடலூர் மேற்கு
15) தஞ்சை தெற்கு
16) திருவாரூர்
17) திருச்சி தெற்கு
18) பெரம்பலூர்
19) அரியலூர்
20) தருமபுரி கிழக்கு
21) தருமபுரி மேற்கு
22) கிருஷ்ணகிரி கிழக்கு
23) சேலம் கிழக்கு
24) சேலம் மத்திய
25) திருப்பூர் வடக்கு
26) ஈரோடு வடக்கு
27) நீலகிரி
28) மதுரை வடக்கு
29) மதுரை தெற்கு
30) தேனி தெற்கு
31) விருதுநகர் வடக்கு
32) தென்காசி வடக்கு
33) தென்காசி தெற்கு
34) தூத்துக்குடி வடக்கு

**குறிப்பு:** தலைமைக் கழக இரசீது எண். 2100 க்கு மேல்உள்ள இரசீதுகளுக்கான உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கும் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018.
23 - 12 - 2023

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக மாவட்ட சிறுபான்மை நல உரிமைப்பிரிவு சார்பில் மாவட்ட அமைப்பாளர் எஸ். ஆல்பர்ட் தலைமையில், கண்டோன்மெண்ட்டில் நடைபெற்ற சமத்துவ கிறிஸ்துமஸ் பெருவிழாவில் கழக பொருளாளர், கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாநில சிறுபான்மை ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் இணைந்து கேக் வெட்டி 1,000 கிறிஸ்துவ பெரு மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். அருகில் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, பகுதி செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### அரசு நிர்வாகத்திலும் அரசியலமைப்புப் பதவிகளிலும்

# நிர்வாகத் திறனோடு செயல்பட்டவர் எம்.எம்.ராஜேந்திரன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, டிச.24-

அரசு நிர்வாகத்திலும் அரசியலமைப்புப் பதவிகளிலும் நிர்வாகத் திறனோடும் செயல்பட்டவர் மறைந்த ஒடிசா முன்னாள் ஆளுநர் எம்.எம்.ராஜேந்திரன் என்று அவரது மறைவையொட்டி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளரும், ஒடிசா மாநில முன்னாள் ஆளுநருமான எம்.எம்.ராஜேந்திரன் அவர்கள் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளரும் ஒடிசா

மாநில முன்னாள் ஆளுநருமான எம்.எம்.ராஜேந்திரன் அவர்கள் மறைவெய்தினார் என்று அறிந்து மிகவும் வருந்துகிறேன்.

1957 பேட்ச் ஐ.ஏ.எஸ் அதிகாரியான ராஜேந்திரன் அவர்கள் உதவி ஆட்சியர், துணை ஆட்சியர் போன்ற பொறுப்புகளை வகித்து இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியராக உயர்ந்தவர். அந்தச் சமயத்தில் 1964-ஆம் ஆண்டு தனுஷ்கோடியில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தை எதிர்கொண்டவர். அந்த அனுபவத்தைக் கொண்டு பின்னாளில் 1999-ஆம் ஆண்டு ஒடிசா மாநில ஆளுநராக இருந்த போது அங்கு நிகழ்ந்த புயலை எதிர்கொள்வதிலும் மாநில அரசுடன் இணைந்து பணியாற்றி முக்கியப் பங்களிப்பை ஆற்றியுள்ளார்.



தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலில் இருந்தபோது தலைமைச் செயலாளரான ராஜேந்திரன் அவர்கள் 1989-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சரான பின்னும் அப்பதவியில் தொடர்ந்து நீடித்துப் பணியாற்றினார்.

அரசு நிர்வாகத்திலும், அரசியலமைப்புப் பதவிகளிலும் சிறப்பாகவும் நிர்வாகத் திறனோடும் ஆக்கப் பூர்வமாகவும் செயல்பட்டவர் ராஜேந்திரன் அவர்கள். அவரை இழந்து தவிக்கும் அவரது துணைவியாருக்கும், உறவினர்களுக்கும், அவருடன் பணியாற்றிய இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### கன மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள பாதிப்பினால்

# கல்லூரிச் சான்றிதழ்களை இழந்த மாணவ - மாணவிகளுக்கு கட்டணமின்றி நகல்கள்!

## உயர் கல்வித் துறை இணைய தளம் உருவாக்கம்!

சென்னை, டிச. 24 -

“கன மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள பாதிப்பினால் கல்லூரிச் சான்றிதழ்களை இழந்த மாணவ / மாணவிகளுக்கு கட்டணமின்றி அவற்றின் நகல்களை பெறுவதற்கு இணைய தளம் உயர் கல்வித் துறையால் உருவாக்கப் பட்டுள்ளது.

தற்போது, தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களின் பல பகுதிகளில் வரலாறு காணாத மழைப்பொழிவு ஏற்பட்டு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

ஏற்கனவே, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில், “மிக்ஜாம்” புயல் காரணமாக ஏற்பட்ட மழை வெள்ள பாதிப்பினால் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகச் சான்றிதழ்களை இழந்த மாணவ / மாணவிகள் தங்கள் சான்றிதழ்களின் நகல்களை கட்டணமின்றி பெறுவதற்கு ஏதுவாக www.mycertificates.in என்ற இணையதளம் உயர்கல்வி துறையால் உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போது, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மாணவ / மாணவியர்களும் தாங்கள் இழந்த சான்றிதழ்களின் நகல்களை பெற அச்சான்றிதழ்கள் பற்றிய விவரங்களை மேற்கண்ட இணையதளம் வாயிலாக பதிவு செய்து கொள்ளலாம்.

மாணவ / மாணவிகள் மேற்கண்ட இணையதளம் வாயிலாக சான்றிதழ்களின் விபரங்களை பதிவு செய்தபின் அவர்களது மின்னஞ்சலுக்கு ஒப்புகை (*Acknowledgement*) அனுப்பப்படும்.

அவ்வாறு பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்களின் நகல்கள், கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்திடமிருந்து பெறப்பட்டு, மாணவ / மாணவியர்களுக்கு, அவர்கள், எந்த மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்தார்களோ, அதே மாவட்டத் திலேயே, அவர்களுக்கு வழங்கப்படும். அதாவது, திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கு திருநெல்வேலி மாவட்டத்திலேயே வழங்கப்படும்.

மேலும், இணையதளத்தில் பதிவு செய்வது குறித்த சந்தேகங்களுக்கு தெளிவு பெற, தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தில் செயல்படும் கட்டணமில்லா அழைப்பு மையத்தை 18004250110 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு உயர் கல்வித் துறை அறிவித்துள்ளது.

### ஈரோடு வடக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி தலைவர்

# திருமதி ஏ.சி.குப்புலட்சுமி மறைவு!

## முதல்வர் – தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச. 24-

ஈரோடு வடக்கு மாவட்டக் கழக மகளிர் தொண்டர் அணித் தலைவர் திருமதி ஏ.சி.குப்புலட்சுமி மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

அவரது இரங்கல் செய்தி வருமாறு:

ஈரோடு வடக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி தலைவர் திருமதி ஏ.சி.குப்புலட்சுமி அவர்கள் 23.12.2023 அன்று இயற்கை எய்தினார் என்பதை அறிந்து வருந்துகிறேன். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும் கழகத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



எழும்பூர் வடக்கு பகுதி 77அ வட்டம் சிவராஜபுரத்தில் இ.மாரிக்கண்ணு அவர்களின் மனைவியும் சென்னை கிழக்கு மாவட்ட பிரதிநிதி மா. காந்தியின் தாயாருமான மா.அமராவதி படத்திறப்பு நிகழ்ச்சி இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ். ரவிச்சந்திரன், சங்கர் நானா, நா. பாலு, புலவர் சாமி நாகப்பன், கா.எழிலன் , சூளை நேரு, ஜெ.விஜயகுமார், கே.வள்ளி, மு.கமலக்கண்ணன், தா. ஸ்ரீதர், மருதன், புரசை குமார், புருசோத்தமன், ஆர். ஆரோக்கியம், இ.காளிதாஸ், ஜி.ராஜா, வி.ராஜா, இ.வெங்கடேசன், ஏ.யு.மணிவண்ணண், கே.சுப்புராயன், கா.கோ.கோமகன், தன.பிரபாகரன், ஆதி அசோக், கே. ராஜா, ஏ.முத்து, ஆர். ரவிச்சந்திரன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் ஏற்பாட்டில் கிருஸ்துமஸ் விழாவை முன்னிட்டு 2000 பேர்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, செஞ்சி கே.மஸ்தான் மற்றும் சுபேர்கான், தா.இளைய அருணா ஆகியோர் வழங்கினர். இதில் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், ஆர்.வெற்றிவீரன், நேதாஜி.யு.கணேசன் பொதுமக்கள் உள்ளிட்ட கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் ஏற்பாட்டில்

# கிருஸ்துமஸ் விழா : 2000 பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

## பி.கே.சேகர்பாபு - செஞ்சி கே.எஸ்.மஸ்தான் - சுபேர்கான் - தா.இளைய அருணா வழங்கினர்!

சென்னை, டிச. 24-

ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் ஏற்பாட்டில் கிருஸ்துமஸ் விழாவை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் என 2000 நபர்களுக்கு அரிசி,பெட்ஷீட், பால் பவுடர், புடவை, ஆயில், மூன்று சக்கர வண்டிகள், காதுகேட்கும் கருவிகள், வாக்கிங் ஸ்டிக் உள்ளிட்ட நலத்திட்ட பொருட்களை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சிறுபான்மை நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.மஸ்தான், மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு செயலாளர் டாக்டர்.சுபேர்கான் ஆகியோர் வழங்கினர்.

இதில் சென்னை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.இளைய அருணா, பகுதி கழக செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ். ஜெபதாஸ் பாண்டியன், மாவட்ட அவைத்தலைவர் ஆர்.வெற்றிவீரன், மண்டலகுழு தலைவர் நேதாஜி. யு.கணேசன், என்.மருதுகணேஷ், இரா.பொன் இளவரசன், இ.ரவிக்குமார், லயோலா கே.மதன், வை. கௌதம், கட்பீஸ் ப.சோமசுந்தர மூர்த்தி, என். அனிபா, ஆர்.டி.ராஜா, கே. பாலு, எம்.வேத லட்சுமி, மாஸ்.டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம். லோகநாதன், திராவிட செல்வி, பி.சீனிவாசன், மாமன்ற உறுப்பினர்கள் தேவிகதிரேசன், குமாரிநாகராஜன், பவித்ராநரேஷ்குமார், மணிமேகலைஏழுமலை, எம்.ரேணுகா, எம். விமலா, எஸ்.பி.எஸ்.புத்தன்,

வெ.சு.சத்தியநாராயணன், சி.மணிகண்டன், எஸ்.எம்.பரசுராமன், எம். கலைவாணன், தமீம் அன்சாரி, என்.எம்.கதிரேசன், தா.வ.மு. கஜேந்திரன், நா. கோதண்டன், மா. நாகராஜ், ச.தமிழ்செல்வன், எஸ்.எல்.சுந்தர், கி.தேவன், ஆர்.ஏ.எம்.சசிகுமார், ஜி. ஏழுமலை, ஆர்.ராஜன், எம்.எம்.சாமி, வி.முத்து, பி.கே.மூர்த்தி, ஜெ.சுரேஷ்பாபு, பி.அன்பழகன், ஆர். ரமேஷ், கே.மோகன், சா.திருப்பதிசாமி, டி.ஆர். தணிகாசலம், எம். ரூபசங்கர், எஸ்.சொக்கலிங்கம், பா.வேதாசலம், மீஞ்சூர்.ஜி.முருகன், ஜி.ராஜா, கென்னடி, டி.சங்கர், என். ஜானகிராமன் உள்ளிட்ட அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கிருஸ்துவ பாதிரியார்கள், பொது மக்கள், கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### வெளிநாடு செல்லும் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கான

# புலம்பெயர்வோர் மசோதாவை ஒன்றிய அரசு சட்டமாக்கிட வேண்டும்!

## தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் வலியுறுத்தல்!

சென்னை, டிச. 24-

“வெளிநாடு செல்லும் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கான புலம்பெயர்வோர் மசோதாவை ஒன்றிய அரசு சட்டமாக்கிட வேண்டும்” என்று தமிழ்நாடு விவசாயிகள், தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்.குமார் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து நடைபெற்ற கருத்தரங்கில் பொன். குமார் பேசியதாவது:-

கட்டுமானத் தொழிலாளர்கள், வீட்டுப் பணியாளர்கள், ஓட்டுநர்கள் போன்ற அமைப்புசாராத் தொழிலாளர்கள் தரமான வேலை, நல்ல சம்பளம் என்ற நம்பிக்கையோடு வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து செல்கின்றனர். ஆனால், அந்த நாடுகளுக்குச் சென்ற பிறகு பல்வேறு இன்னல்களுக்கு இந்தத் தொழிலாளர்கள் ஆளாகின்றனர். குறிப்பாக, முகவர்கள் மற்றும் துணை முகவர்களால் போலியான வாக்குறுதி வழங்கப்பட்டு, அதிக அளவில் பணம் பெற்றுக் கொண்டு டூரிஸ்ட் விசாவில் வெளிநாடுகளுக்கு தொழிலாளர்களை அனுப்பி வைக்கின்றனர். அந்த நாடுகளுக்குச் சென்ற பின் சொல்லப்பட்ட வேலையோ, உறுதியளிக்கப்பட்ட சம்பளமோ அவர்களுக்கு கிடைப்பதில்லை. பல தொழிலாளர்கள் ஒட்டகம் மேய்க்க நிர்ப்பந்தப் படுத்தப்படுகின்றனர். குறைந்த சம்பளத்திற்கு நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நிலையில் வெளிநாடுகளுக்குச் சென்ற தொழிலாளர்களின் பாஸ்போர்ட்கள் அந்த நாட்டு முதலாளிகளால் பறிமுதல் செய்து கொள்ளப்படுகிறது. இதனால் விரும்பிய நேரத்தில் தாயகம் திரும்ப முடியாத பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர். இறந்து போனத் தொழிலாளர்களை தமிழ்நாட்டுக்கு கொண்டு வர முடியாத நிலை, செய்த வேலைக்கு உரிய சம்பளம் கிடைக்காத சூழல் இப்படி பல்வேறு பிரச்சினைகளை அந்நிய நாடுகளில் தொழிலாளர்கள் சந்திக்கின்றனர்.

இப்படிப்பட்ட புலம் பெயர்ந்தத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக 2010 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி காலத்தில் தலைவர்



கலைஞர் அவர்களால் வெளிநாடு வாழ் தமிழர் நலச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்த சட்டத்தின் மூலம் வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியம் அமைக்கப்பட்டது. ஆனால் ஆட்சி மாற்றத்திற்கு பின், பத்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் அந்த சட்டமும், வாரியமும் முறையாக செயல்படாமல் முடக்கி வைக்கப்பட்டது. தற்போது தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மீண்டும் தி.மு.க. ஆட்சி ஏற்பட்ட பின் இந்த வெளி நாட்டில் உள்ள வெளிநாடு வாழ் தமிழர்கள் மற்றும் புலம்பெயர்ந்து செல்லும் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக தலைவர் கலைஞரால் கொண்டுவரப்பட்ட அந்த சட்டத்தை கொண்டு நலவாரியம் அமைத்து அதற்கு திட்டங்கள் தீட்டி நடைமுறைப்படுத்துவதற்கு உத்தரவிட்டுள்ளார்கள்.

அதுபோல இந்த துறைக்காகவே ஒரு அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டு அதற்கு கே.எஸ்.மஸ்தான் அவர்களை அமைச்சராக நியமனம் செய்து இதை கண்காணிக்க ஏற்பாடு செய்துள்ளார்.

ஆனால் மத்தியில் உள்ள மோடி அரசு இந்த தொழிலாளர்களைப் பற்றி கவலைப்படுவதில்லை. புலம் பெயரும் தொழிலாளர்களுக்கான 1993 ஆம் ஆண்டு சட்டத்தை உரிய திருத்தங்களுடன் தேவையான பாதுகாப்பு அம்சங்களுடன் அந்த மசோதா பாராளுமன்றத்தில் விவாதித்து நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால், இது வரை அந்த மசோதாவை சட்டமாக்கப்படவில்லை.

இவ்வாறு பொன். குமார் பேசினார்.

இந்த செயலை கண்டித்தும் விரைந்து இந்த மசோதாவை சட்டமாக்கிட நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வைத்திட வேண்டும் என்றும் வலியுறுத்தியும் கருத்தரங்கு சென்னையில் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் சார்பில் நடைபெற்றது.

சென்னை, தியாகராய நகர், சர்பிட்டி தியாகராய அரங்கத்தில் இந்த புலம் பெயரும் தொழிலாளர்களுக்கான பிரச்சினைகள் குறித்த கருத்து அரங்கம் விவசாயிகள்தொழிலாளர்கள் கட்சி பொதுச்செயலாளர் என்.சுந்தராஜ் தலைமையில் நடைபெற்றது. இளைஞரணித் தலைவர் வினோத்பொன்குமார், பொதுச்செயலாளர்கள் ஜெகமுருகன், வி.சுப்பராயலு, மாநிலப் பொருளாளர் ஆர். சேகர் ஆகியோர் முன்னிலையில் பொதுச்செயலாளர் பொறி.எஸ்.ஜெகதீசன் வரவேற்று பேசினார்.

இந்த கருத்தரங்கில் கட்டுமானத் தொழிலாளர் நல வாரிய தலைவர் பொன்குமார் தொடக்க உரையாற்றினார். சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கே.எஸ்.செஞ்சி மஸ்தான், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி கணேசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். சி.பி.எம். செயலாளர் மு. பாலகிருஷ்ணன். சி.பி.ஐ. இணைப் பொதுச் செயலாளர் வீரபாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பொதுச் செயலாளர் எஸ். எஸ்.பாலாஜி எம்.எல்.ஏ., இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பொதுச்செயலாளர் முகமது அபுபக்கர், இந்திய தேசிய லீக் தலைவர் பஷீர் அகமது, மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மு.கணபதி, விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம். வி.பிரபாகரராஜா ஆகியோர் உரையாற்றினர்.

அருணோதய புலம் பெயர்வோர் அமைப்பின் இயக்குனர் டாக்டர் பெர்ணாடி.சாமி, தேசிய வீட்டு பணியாளர் சங்க ஒருங்கிணைப்பாளர் எம்.வளர்மதி, *Geneva Global* அமைப்பின் பொறுப்பாளர் பி. பாலமுருகன், தொழிற்சங்க கூட்டமைப்பு பொதுச்செயலாளர் குருநாகலிங்கம் உட்பட பலர் உரையாற்றினர்.



மாதவரம் சட்டமன்றத் தொகுதி மணலி மண்டலத்திற்குட்பட்ட 19 வது வார்டு சென்னை குடிநீர் வடிகால் வாரிய பணிமனையில் வேலை செய்யும் லாரி ஓட்டுநர்களுக்கு, நிவாரண பொருட்களை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார். 19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில், மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார், ஜி. ராஜேஷ் கண்ணன், முகமது முஸ்தபா, காசி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

## நிர்மலா சீத்தாராமன் சொல்வது சரியா? தமிழ்நாட்டை மாற்றாந்தாய் பிள்ளையாக பார்க்கக் கூடாது!

# தேசிய பேரிடராக அறிவித்து, கேட்ட நிதியைக் கொடுத்தே ஆக வேண்டும்!

**தமிழ்நாட்டில் கடும் மழை வெள்ள பாதிப்பை தேசிய பேரிடராக அறிவித்து, நிதி ஒதுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு கோரிக்கை விடுத்ததற்கு ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அலட்சியமான, தான்தோன்றித்தனமான கருத்தினை நேற்று முன்தினம் வெளிப்படுத்தினார்.**

“நிர்மலா சீதாராமன் சொல்வது சரியா?” என்ற கேள்வியை “மின்னம்பலம்” இணையதள தொலைக்காட்சி பொதுமக்களிடம் எழுப்பியது. அக்கேள்விக்கு பொதுமக்கள் அளித்த பதில்களை இங்கே தொகுத்து வெளியிட்டுள்ளோம்.

அது வருமாறு:




**திருமதி கலா:** தமிழ்நாட்டிற்கு இந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு ஓட்டு கேடக உரிமை இருக்கும் போது, எங்களுக்கு வெள்ள நிவாரண மாக தேசிய பேரிடராக அறிவிச்சுதான் ஆக வேண்டும். நாங்களும் தேசியத்தில் சேர்ந்துதான் இருக்கோம். நாங்கள் பெத்த பிள்ளைகளும் இராணுவத்தில் போய் சேர்ந்து நாட்டு மக்களை காப்பாற்றப் போகிறார்கள். அந்த மாதிரி இருக்கும் போது, இங்கே ஏன் செய்ய மாட்டேன் என்கிறார்கள்.

அதற்காக சுனாமி, நில நடுக்கம் வரவேண்டுமா? இது எப்போதும் பெய்யாத மழை, அதிகபட்சமாக நிறைய சென்டி மீட்டர் மழை பெய்து இருக்கிறது. அதுவும் திருச்செந்தூரிலெல்லாம் தலைக்கு மேலே வெள்ளம் போனது.

இன்னும் எவ்வளவு மக்கள் இறந்து போனார்கள் என்பது குறித்து கணக்கு எடுப்பதற்கே அந்த ஊருக்கு போக முடியவில்லை. அந்த மாதிரி நிலைமை இருக்கும்போது, இதனை தேசிய பேரிடர் என்று அறிவித்தால் என்ன? எல்லாம், நானே ராஜா, நானே மந்திரியா? நாங்கள் எல்லாம் சேர்ந்து ஓட்டு போட்டால் தான் யாருமே பிரதமராக உட்கார முடியும். முதல்வராகவும் உட்காரவும் முடியும்.

அவர்கள் வந்து ஜீ..ஜீ... என்று சொல்கிறார்கள். இந்தியில் போலோ, ஹவோ, அச்சா அந்த மாதிரி பேசுவதினால் அவர்கள் அங்கே போய்விடுறார்கள். நாங்கள் ஐயா, ஐயா என்று கேட்பது அவர்கள் காதுகளில் என்ன கேட்கிறதோ? அவருக்கு தமிழ் தெரியவில்லை. மலையாளம் தெரியவில்லை, தெலுங்கு தெரியவில்லை, கன்னடம் தெரியவில்லை, அதனாலே தமிழர்கள் அவர்களுக்கு கண்ணுக்குத் தெரியவில்லை.

தமிழர்கள் எல்லாம் மாற்றாந்தாய் குழந்தைகள் அவர்களுக்கு. அவர்களை சும்மா ஓரப் பார்வையாக பார்க்கிறார்கள். யாருமே இந்தக் காலத்தில் மக்களுக்காக கிடையாது. அவர்களுக்கு (நிர்மலா சீதாராமன்) பதவி ஆசை. அந்த பதவி ஆசைக்கு, அந்தப் பதவி கொடுக்கின்ற அந்த இந்திகாரர்களுக்கு அவர் (நிர்மலா சீதாராமன்) ஜால்ரா தட்டுகிறார்கள். அந்தக் கட்சி திரும்ப திரும்ப தன்னை நிதி அமைச்சராக போடுவார்கள், நாம கவுரவமான மினிஸ்ட்டர், மினிஸ்டர் என்று சொல்லி உலகை சுத்திப் பார்க்கலாம். இதுதான் அந்த அம்மாவினுடைய ஆசை.



**சந்திரசேகர்:** இந்த 450 கோடி ரூபாய் கொடுத்தது தவறோ, சரியோ என்பது முக்கியம் கிடையாது. இது முதல் தவணை என்று சொல்லி இருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்களின் குழு வந்து அவர்கள் பார்க்கப் போகிறார்கள். நானே ஒரு கம்பெனி வைத்து இருக்கிறேன் என்கிற போது ஒருத்தனுக்கு 5000 ரூபாய் கொடுத்தேன் என்கிற போது, அந்த ஐந்தாயிரம் ரூபாய்க்கு என்ன செலவு என்பதை பார்த்துவிட்ட பிறகு தான் அடுத்து பத்தாயிரம் ரூபாயை அவனுக்கு கொடுப்பேன்.



**வீரதமிழன்:** ஒரே நேரத்தில் இவ்வளவு மழை பெய்துவிட்டது. அதனை பேரிடராக அறிவித்து நிவாரணம் செய்யலாம். ஏன் என்றால் இதில் எல்லோரும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். நீங்கள் நிதி அமைச்சர், அங்கெல்லாம் கொடுத்த மாதிரி இங்கே கொடுங்கள். கணக்கெடுத்துப் பாருங்கள். இன்சால்மெண்ட் கணக்கை விடுங்கள். இங்கே கேட்டு இருக்கிறார்கள் இல்லையா, அதனை கொடுங்கள். 12 ஆயிரம் கோடி ரூபாய் கேட்டால் 450 கோடி ரூபாய் தருகிறோம் என்று சொல்கிறீர்கள்.

ஏன் ஒன்றியக் குழு இங்கே வந்து பார்த்து பரிந்துரை செய்து இருக்கிறார்கள். அதனை கொடுத்து விட்டு போகலாமே. அங்கேயெல்லாம் கொடுத்த மாதிரி இங்கேயும் கொடுக்கலாமே.

ஏன் தமிழ்நாட்டின் வரி பணத்தை வாங்கிக் கொள்கிறீர்கள். இந்த 6 மாதத்தில் ரூ.23 ஆயிரம் கோடி அவர்களுக்கு வருமானமாக வந்திருக்கிறது. அதிலிருந்து கொடுத்து இருக்கலாமே. இங்கே இருந்து தானே சம்பாதித்து இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இருந்து வரி வந்து இருக்கிறது, இல்லையா?

## “மின்னம்பலம்” இணையதளத்தில் மக்கள் கருத்து!

அந்த வரியில் இருந்து கொடுத்து இருக்கலாமே. எக்ஸ்ட்ராவா கொடுக்கப் போறாங்க. நாங்கள் வரி கட்டுகிறோம். அதனை கணக்குப்போட்டு பார்க்கட்டும்.

இந்த ஆறு மாதத்தில் ஜி.எஸ்.டி. வரி எவ்வளவு கட்டியிருக்கிறோம். அதிலிருந்து கணக்குப் பார்த்தால் அவர்கள் கொடுத்திருக்கின்ற பணம் ஒரு சதவிகிதம் கூட இல்லையே.



**ரமேஷ்:** தூத்துக்குடியை பார்த்தால் இது வரலாறு காணா வெள்ள மாக சொல்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு இருநூறு வருடமோ, முன்னூறு வருடமோ என்று சொல்கிறார்கள். மக்கள் எவ்வளவோ வாழ்வாதாரத்தை இழந்து இருக்கிறார்கள். மக்களுக்கு கொடுக்கப்படும் ரூபாய் 5,000, ரூபாய் 6,000 கூட போதாது. இது கண்டிப்பாக ஒன்றிய அரசு செய்வது சரி கிடையாது.


நாங்கள் என்ன இந்தியாவுக்கு வெளியேவா இருக்கின்றோம். பாகிஸ்தானிலேயா இருக்கிறோம். இந்தியாவில்தான் இருக்கிறோம். பாரத மாதா என்பது எங்களுக்கும் தான். ஓ.கே.தானே. தமிழ்நாடு பாரதமாதாவில் தான் இருக்கிறது. அப்படி என்கிற போது, இந்தியாவில் இது ஒரு பகுதி தானே தமிழ்நாடு. எல்லா மாநிலங்களையும் தனியாகத் தானே பார்க்க வேண்டும். இதனை பேரிடராக அறிவிக்க வேண்டும்.

மாநில அரசும் சரி, கார்ப்பரேஷனும் சரி வேலை செய்தார்கள். நாம் யாரையும் குறையே சொல்லக்கூடாது. மத்திய அரசு கண்டிப்பாக இதனை பேரிடராக அறிவிக்க வேண்டும். கேட்ட நிதியை ஒதுக்க வேண்டும். சில பேர் செய்கின்ற தவறினால் என்னை பொறுத்தவரைக்கும் அடி மட்டத்தில் இருக்கிற மக்கள் பாதிக்கக்கூடாது. அவர்களுக்கு கொடுப்பது சரியாக போய் சேர வேண்டும். அதில் ஒன்றிய அரசின் உதவி கண்டிப்பாக இருக்க வேண்டும். தமிழ்நாட்டை தனிநாடாக பார்க்கக் கூடாது.



**ஷஹாப்:** தமிழ்நாட்டை மாற்றந்தாய் பிள்ளையாக பார்க்கக்கூடாது. ஒன்றிய அரசு அது மாதிரிதான் பார்க்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் சென்னை மக்கள் எவ்வளவோ அவதிப்பட்டார்களோ அதனை விட இரு மடங்கு நெல்லை, தூத்துக்குடி போன்ற மற்ற மாவட்டங்களும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இதில் கவனம் செலுத்த வேண்டும். சும்மா அங்கே உட்கார்ந்து கொண்டு இப்படி பேசாமல், களத்தில் இறங்கி வேலை செய்து விட்டு பேச வேண்டும். அவர்கள் (நிர்மலா சீதாராமன்) வேலை செய்யாமல் மற்றவர்களை சொல்கிறார்கள், சரியாக வேலை செய்யவில்லை என்று. சரியாக வேலை செய்யவில்லை என்று மட்டும் சொல்லத் தெரிகிறது இல்லையா, இவ்வளவு பாதிப்பு இருக்கிறது என்பது அவர்களுக்கே தெரிகிறது என்கிறபோது, அதற்கு தேவையான நிதியை கொடுத்து உதவ வேண்டும்.

பிரச்சினையை தீர்க்க அவர்கள் இறங்க வேண்டும். பொருளாதாரத்தை காக்கின்ற அமைச்சர் நிர்மலா சீதாராமன் தானே. அவர்கள் தான் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வந்து இறங்கி வேலை செய்தால் மக்களுக்கு என்ன பாதிப்பு என்பது அவர்களுக்குத் தெரிய வரும். இது தேசிய பேரிடர் கிடையாது என்பது பெரிய தவறு. இப்படி சொல்வதன் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு அவர்கள் அநீதி செய்கிறார்கள் என்றுதான் அர்த்தம். தேசிய பேரிடர் என்று அறிவித்தே ஆக வேண்டும். கேட்ட நிதியை கொடுத்தே ஆக வேண்டும். ஏன் என்றால் ஜி.எஸ்.டி. என்று நிறைய வரி மற்றும் நிதியை தமிழ்நாட்டில் இருந்து பல மடங்கு அங்கே போகின்றது. அதில் சும்மா பத்து சதவிகிதம் தான் அவர்கள் திருப்பி தமிழ்நாட்டிற்கு கொடுக்கிறார்கள்.



**மேரி:** எல்லா இடங்களிலும் தான் பாதிக்கப்பட்டு இருக்கிறது. எல்லா இடங்களுக்கும் தான் நிதி கொடுக்க வேண்டும். பாவம் மக்கள். இருக்கிறவர்களுக்கு, இல்லாதவர்களுக்கு என்று எல்லோருக்கும் கொடுக்க வேண்டும். இருக்கிறவர்களை விட இல்லாதவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும். சென்னையில் எல்லோரும் நல்லாதான் இருக்கிறார்கள். பாவம் தூத்துக்குடி, நெல்லையில் கழுத்து வரைக்கும் தண்ணீர் வந்து எவ்வளவோ பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். பிரதமர் மோடி, அவர் ஊருக்குத்தான் செய்கிறார். தமிழ்நாட்டிற்கு இதுவரை எதுவும் செய்தது கிடையாது. அவர்கள் செய்தால் நன்றாக இருக்கும். அவர்கள் செய்யவில்லையே.






**ராஜ்குமார்:** எல்லாவற்றுக்கும் ஜி.எஸ்.டி. போடுகிறார்கள், நாங்கள் குடிக்கின்ற டீக்குக் கூட ஜி.எஸ்.டி. போடுகிறார்கள். தமிழ்நாட்டிற்கு வெள்ளப் பாதிப்புக்கு அவர்கள் கொடுத்து தானே ஆக வேண்டும். தமிழ்நாட்டில் பேரிடரால் எவ்வளவு பாதிக்கப்பட்டு இருக்கிறது. எவ்வளவு மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். தமிழ்நாட்டுக்கு, தமிழ்நாட்டு மக்களுக்கு அவர்கள் ஒர வஞ்சனை செய்கிறார்கள். அவர்கள் தமிழ்நாட்டிற்கு எதுவும் செய்வது கிடையாது. ஓட்டு மட்டும் போட வேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறார்கள். ஏன் செய்வது கிடையாது என்றால் தமிழ்நாட்டில் அவர்களால் கால் ஊன்ற முடியவில்லை. ஒரு சீட் கூட அவர்களால் வர முடியவில்லை. ஓட்டுப்போட்டு அவர்களை சீட்டில் உட்கார வைத்தால் அப்போதான் நிதி தருவார்கள். அவர்களால் இங்கே உட்கார முடியவில்லை இல்லையா, அதனால் தான் நிதி தர மறுக்கிறார்கள்.



**ஞானசேகர்:** இதனை கண்டிப்பாக தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும். ஏன் என்றால் தமிழ்நாடு இந்திய நாட்டில் தானே இருக்கிறது. அப்போது இதனை தேசிய பேரிடராக அறிவித்துதான் ஆக வேண்டும். அதேபோல நமக்கு ஒதுக்குகின்ற நிதியும் பார்த்தீர்கள் என்றால் குறைவாகத்தான் ஒதுக்குகிறார்கள்.

ஆனால் வட மாநிலங்களுக்கு அதிகமாக நிதி ஒதுக்குகிறார்கள். இதுதான் ஓர வஞ்சனை. குறைந்தபட்சம் என்னைப் பொறுத்த வரைக்கும் , நான் படித்த வரைக்கும், பார்த்த வரைக்கும் பார்த்தால் கண்டிப்பாக பத்தாயிரம் கோடி வரைக்கும் கொடுக்க வேண்டும். அதாவது இந்த ஒரு பாதிப்புக்கு இப்போது தென் மாநிலங்களில் நான்கு மாவட்டங்களில் நடந்திருக்கிறது. அதனையும், இதனையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இவர்கள் ஒதுக்கிய நிதி ஒன்றுமே கிடையாது.



**ராவ்:** தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும். பாதிப்பு அதிகமாக இருக்கிறது. இந்த அம்மா (நிர்மலா சீதாராமன்) சொல்வது தவறு. இங்கே பாருங்கள், இந்த பத்திரிகையில் ஆயிரம் வீடுகள் இடிந்தது, பாதித்து இருக்கிறது என்று போட்டு இருக்கிறார்கள். இவர்களா வந்து கட்டிக் கொடுக்கப்போகிறார்கள். இந்த அம்மா வேண்டும் என்றே பழி வாங்குகிறார்கள்.

இந்த அம்மா தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண்மணிதான். திருச்சியைச் சேர்ந்த பெண்மணி. இவங்களைப் பற்றி எல்லாம் எனக்குத் தெரியும். யார், எப்படி, முன்பு எப்படி இருந்தார்கள் என்று. தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்த பெண் இவர். அங்கே போய் இப்படிப் பேசலாமா? இவரது பேச்சு தமிழ்நாட்டு மக்களுக்கு துரோகம் செய்வது மாதிரி இருக்கிறது. இவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் இங்கே மக்கள். இதனை தேசியபேரிடராக அறிவிக்க வேண்டும் என்று கோருவது சரியானதுதான். அவர்கள் பணம் கொடுக்காமல் ஏமாற்றுவதற்காக இப்படியெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.



**நாராயணன்:** இதனை தேசிய பேரிடராகத்தான் அறிவிக்க வேண்டும். ஏன் என்றால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். சென்னையைப் பார்த்தீர்கள் என்றால், எங்கும் இடுப்பளவிற்கு தண்ணீர் இருந்தது. நான் நடந்துச் செல்லும் போது இடுப்பளவிற்கு தண்ணீர் இருந்தது. அந்த அளவிற்கு பெரும் பாதிப்பு.

இதே போன்று தெற்கேயும் நான்கு மாவட்டங்கள் பாதிப்புக்கு உள்ளாகிவிட்டது. தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி, தென்காசி எல்லாம் மிகவும் சேதாரமாகிவிட்டது. இன்னும் அங்கே எல்லாம் சரியாக ஆகவில்லை. ஒன்றியத்திற்கென்று தனியாக ஜி.எஸ்.டி. வரி வாங்குகிறார்கள். அது அவர்களுக்கு வருகின்ற வருமானம் தானே, மக்கள் கொடுக்கின்ற வரி தானே. அதில் கொடுக்கலாம் இல்லையா. ஒரு பன்னிரெண்டாயிரம் கோடி ரூபாய் கேட்டிருக்கிறார். அதனை கொடுத்தால் உதவியாக இருக்கும் மக்களுக்கு. ஏன் என்றால் மக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். மொத்தம் எட்டு மாவட்டங்கள் பாதித்து இருக்கிறது.

தமிழ்நாட்டில் இப்போது வெள்ள நிவாரணம் ஆறாயிரம் ரூபாய் கொடுத்தார் முதல்வர் . அது எல்லாருக்கும் வந்து சேர்ந்துவிட்டது. அதே மாதிரி அந்த மாவட்டங்களுக்கும் அறிவித்து இருக்கிறார் முதல்வர். ஆறாயிரம் ரூபாய் அவர்களுக்கெல்லாம் கொடுக்க வேண்டும் என்றால் பணம் வேண்டும். அப்போது அவர்கள் கொடுத்தால் தானே இங்கே இவர் பணம் கொடுக்க முடியும்.



**சதீஷ்:** எல்லாவற்றுக்குமே நாம் ஒன்றிய அரசை சார்ந்து தான் இருக்கிறோம். ஒன்றிய அரசு பொதுவாக தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, தென் மாநிலங்கள் முழுவதுக்குமே அவர்கள் உதவி எதுவும் செய்ய மாட்டார்கள். வட மாநிலங்களுக்கு செய்கின்ற அளவிற்கு தென் மாநிலங்களுக்கு அவர்கள் எப்போதுமே செய்தது கிடையாது. ரயில் விடுவதாக இருந்தாலும் சரி, வேறு எந்த திட்டங்கள் அறிவிப்பதாக இருந்தாலும் சரி அப்படித்தான் செய்வார்கள்.

தற்போது மழை அளவைப் பார்த்தால் நூறு ஆண்டுகளுக்கு இல்லாத அளவிற்கு மழை பெய்து இருக்கிறது. தூத்துக்குடியில் நூறு வருடமாக பெய்யாத மழை இங்கே பெய்து இருக்கிறது. இது எதிர்ப்பார்த்ததை விட அதிகம்தான். ஏன் ரயிலே இரண்டு நாளாக ஒரே இடத்தில் நின்று விட்டது. அதில் பயணித்தவர்கள் திண்டாடினார்கள். அது சென்ட்ரல் கவர்ன்மெண்ட்டை சேர்ந்ததுதானே. இதனை தேசிய பேரிடராக அவர்கள் அறிவிக்கலாம்.



**ஜொய்ஸ்:** நிறைய பாதிப்பு நடந்திருக்கிறது. இதில் நான் சென்ட்ரல்கவர்ன்மெண்ட், மோடியைத்தான் குறைசொல்வேன். அவர் பொதுவாகவே சரிஇல்லை என்று தான் நான் சொல்வேன். ஏன் என்ற கேள்வி நிறைய இருக்கு, ஆனா அவர் சரியில்லை. முதல்லே அவரால் தான் நாங்கள் நிறைய பிரச்சினைகளை சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இதற்கெல்லாம் முழுக்க முழுக்க அவர்தான் காரணம். கண்டிப்பாக கேட்ட தொகையை கொடுக்கலாம். ரூ.400 கோடி கொடுத்ததெல்லாம் மிகவும் குறைவானது. இதனை தேசிய பேரிடராக அறிவிக்க முடியாது என்று சொன்னது தவறுதான். ஏன் அறிவிக்க முடியாது என்று தான் நான் கேள்வி கேட்கிறேன்?

இவ்வாறு ‘மின்னம்பலம்’ இணையதள தொலைக்காட்சியில் பொதுமக்கள் பேட்டியளித்தனர்.

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் மாவட்டம், கன்னிவாடி பேரூராட்சி, மு.ரெ. அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் 1,541 பயனாளிகளுக்கு தனி நபர் வேலைக்கான அடையாள அட்டைகளை வழங்கினார். அருகில் உதவி இயக்குநர்(பேரூராட்சிகள்) திருமதி ரா.மனோரஞ்சிதம், கன்னிவாடி பேரூராட்சித் தலைவர் திருமதி ச.தனலட்சுமி சண்முகம், துணைத்தலைவர் திருமதி மு.கீதா முருகானந்தம், உதவி செயற்பொறியாளர் திருமதி வீ.வெற்றிச்செல்வி உட்பட பலர் உள்ளனர்.



நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சை பிரிவினை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் பார்வையிட்டு நோயாளிகளிடம் சிகிச்சை முறை குறித்து கேட்டறிந்தார். உடன் துறை செயலாளர் ககன் தீப் சிங் பேடி, நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன்கான், அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மேயர் சரவணன்,பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவ துறை இயக்குனர் மரு.செல்வ விநாயகம், மருத்துவக் கல்வி இயக்குனர் சங்குமணி, மருத்துவக் கல்லூரி டீன் ரேவதி பாலன் உள்பட மருத்துவர்கள் உள்ளனர்.

### திண்டுக்கல் மாவட்டம் -கன்னிவாடி பேரூராட்சியில், தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ்

# 1,541 பயனாளிகளுக்கு தனி நபர் வேலைக்கான அடையாள அட்டைகள்!

## அமைச்சர் இ.பெரியசாமி வழங்கினார்!

திண்டுக்கல், டிச. 24 -

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் மாவட்டம், கன்னிவாடி பேரூராட்சி, மு.ரெ. அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு நகர்ப்புற வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் 1,541 பயனாளிகளுக்கு தனி நபர் வேலைக்கான அடையாள அட்டைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் இ.பெரியசாமி, பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் அரசின் திட்டங்கள் அனைத்து மக்களுக்கும் கிடைக்கும் வகையில் சிறப்பான ஆட்சி நடத்தி வருகிறார்கள். தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறார்.

மத்திய ஆட்சியில் நாம் பொறுப்பு வகித்த கடந்த ஆட்சி காலத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தை இந்தியா முழுவதும் செயல் படுத்த ரூ.90,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு ரூ.60,000 கோடி நிதி தான் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் கிராமப்புற பகுதிகளில்தான் செயல்படுத்தப்படுகிறது. தேர்தல் நேரத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் 100 நாள் வேலை பேரூராட்சி பகுதிகளுக்கும் விரிவு படுத்தப்படும் என்று சொன்னபடி, தற்போது பேரூராட்சி பகுதிகளில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டம் மாநில அரசு நிதியிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. அதன்படி கன்னிவாடி பேரூராட்சியில் இத்திட்டம் தொடங்கப் பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டம் 2023-2024ன் கீழ் பணிவாய்ப்பு கோரி 1,900 பேர் பெயர் பதிவு செய்ததில், 1,541 பயனாளிகளுக்கு தனிநபர் வேலைக்கான அடையாள அட்டைகள் இன்றைய விழாவில் வழங்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்ற பின்னர், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் ரெட்டியார்சத்திரத்தில் ஒரு அரசு கல்லூரி மற்றும் ஆத்தூரில் கூட்டுறவுத் துறை சார்பில் ஒரு கல்லூரி என 2 கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதல மைச்சர், பெண்கள் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அரசுப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்து, உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. குடும்பத் தலைவிகளின் உழைப்பை அங்கீகரிக்கும் வகையில் அவர் களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் தமிழகத்தில் 1.20 கோடி பெண்கள் பயனடைந்து வருகின்றனர். தகுதியுள்ளவர்கள் விடுபட்டி ருந்தால் அவர்களும் இத்திட்டத்தில் பயனடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கிராமப்புற சாலைகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. விவசாயிகள், மகளிருக்காக பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தென்மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து 32 லாரிகளில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நிவாரணப் பொருட்கள் அனுப்பும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருகிறது, என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சிகளில், ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் .ப.க.சிவகுருசாமி, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) ரா.மனோரஞ்சிதம், கன்னிவாடி பேரூராட்சி தலைவர் ச.தனலட்சுமி சண்முகம், துணைத்தலைவர் மு.கீதா முருகானந்தம், உதவி செயற்பொறியாளர் வீ.வெற்றிச்செல்வி, திண்டுக்கல்(மேற்கு) வட்டாட்சியர் .சோ.செழியன், பேரூராட்சி உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சாலை வசதியே இல்லாத கடைக்கோடி கிராமமான

# மஞ்சுகொண்டப் பள்ளிக்கு புதிய சாலை வசதி!

## அமைச்சர் அர.சக்கரபாணி ஏற்படுத்தி கொடுத்தார்!

கிருஷ்ணகிரி, டிச. 24 -

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் தளி ஒன்றியத்தில் உள்ள இதுவரை சாலை வசதியே இல்லாத கிராமத்திற்கு சாலை வசதியை ஏற்படுத்திக் கொடுத்தார் உணவு மட்டும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணியில், ஒய். பிரகாஷ் எம்எல்ஏ முன்னிலையில் நிகழ்ச்சி நடைபெற்றது.

மஞ்சுகொண்டப்பள்ளி ஊராட்சி, பேலுப்பட்டி கிராமத்தில் நபார்டு 202324 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ், ரூ.12 கோடியே 83 இலட்சம் மதிப்பில் தார் சாலை அமைக்கும் பணி மற்றும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில், ரூ.8 கோடியே 95 இலட்சம் மதிப்பில் புதிய தொழில் பயிற்சி நிறுவனம் கட்டிடம் கட்டுமான பணிகளை அமைச்சர் அர.சக்கரபாணி நேற்று துவக்கி வைத்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஒன்றியம், மஞ்சு கொண்டப்பள்ளி ஊராட்சி, பேலுப்பட்டி கிராமத்தில் நபார்டு 202324 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ், ரூ.12 கோடியே 83 இலட்சம் மதிப்பில் 8 கி.மீ தூரத்திற்கு தார்சாலை அமைக்கும் பணிகள் மற்றும் தேன்கனிக்கோட்டையில், அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில், ரூ.8 கோடியே 95 இலட்சம் மதிப்பில் புதிய தொழில் பயிற்சி நிறுவனம் கட்டிடம் கட்டுமான பணிகளை அமைச்சர் அர.சக்கரபாணி, ஒசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், ஒசூர் மாநகராட்சி மேயர் சத்யா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், கூடுதல் ஆட்சியர் வந்தனா கார்க் , மாவட்ட வன அலுவலர் கார்த்திகேயாணி ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தின் கடைகோடி மலை கிராமமான மஞ்சுகொண்டப்பள்ளி கிராமத்திற்கு புதிய சாலை அமைக்க நான் முதலமைச்சர் அவர்களிடம் கடிதம் கொடுத்தேன். அதேப்போல இப்பகுதியை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கடைக்கோடி மலை கிராமமான மஞ்சுகொண்டப்பள்ளி ஊராட்சிக்கு புதிய சாலை அமைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்ததன் அடிப்படையில், முதலமைச்சர் அவர்கள் உடனடியாக சாலை அமைக்க ரூ.12 கோடியே 83 இலட்சம் ஒதுக்கீடு செய்து, இப்பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் சாலை அமைக்கும் பணி ஊரக வளர்ச்சித்துறை மூலம் தளி ஒன்றியம், மஞ்சு கொண்டப்பள்ளி ஊராட்சி, பேலுப்பட்டி கிராமத்தில் நபார்டு 202324 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ், உடுபராணி முதல் நந்திபுரம் வரை ரூ.8 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டிலும், பேலாளம் முதல் குருசாதப்பன் தொட்டி வரை ரூ.4 கோடியே 70 இலட்சம் மதிப்பில் 8 கி.மீ தூரத்திற்கு தார்சாலை அமைக்கும் பணிகள் துவக்கி வைக்கப் பட்டுள்ளது.

இந்த கடைக்கோடி கிராமத்திற்கு வரவேண்டுமென்றால் கர்நாடகா மாநிலத்திற்கு சென்று 50 கி.மீ தூரம் சுற்றி தான் வரவேண்டியுள்ளது. இச்சாலை அமைப்பதனால் கர்நாடக மாநிலத்திற்கு செல்லாமல் எளிதாக விரைந்து அஞ்செட்டி கிராமத்திற்கு வந்து சேரலாம். மூன்று, நான்கு மாத காலத்திற்குள் பணிகள் முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்படும். அதேபோல மலைக்கிராம மக்கள் பயனடையும் வகையில் தளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கப்பக்கல், கோவள்ளி, சொல்லேபுரம், ஜாகிர்கோடிப்பள்ளி, அர்த்தகூர், காடிச்சிப்பள்ளி, எஸ்.உச்சனப்பள்ளி, ஜே. கொல்லப்பள்ளி, லக்கசந்திரம் ஆகிய பகுதிகளுக்கு புதிய பகுதிநேர நியாய விலைக்கடைகள் மற்றும் பகுதிநேர நியாயவிலைக் கடைகளை, முழுநேர நியாய விலைக் கடையாக தரம் உயர்த்தப்பட்டு 19.12.2023 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதேப்போல அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், கலைஞர் வேளாண் வளர்ச்சித் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, புதுமைப் பெண் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இந்த சாலை அமைத்து முடித்தவுடன் இக்கிராமத்திற்கு பேருந்து வசதிகள் ஏற்படுத்தி தரப்படும். எனவே கிராமப்புற மக்கள், மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார். தற்போது மாநகராட்சி, பேரூராட்சி பகுதிகளில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ், பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று ஒரு மாத காலத்திற்குள் தீர்வு காணப்பட வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள். தொடர்ந்து, ஊராட்சி பகுதிகளிலும் மனுக்கள் பெற்று பட்டா மாறுதல், புதிய குடும்ப அட்டைகள், மின்சார வசதி, புதிய சான்றிதழ்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

தொடர்ந்து, அமைச்சர் அவர்கள், அஞ்செட்டி வட்டம், மஞ்சு கொண்டப் பள்ளி ஊராட்சியை சேர்ந்த 10 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார். மேலும், வேல்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாணவ, மாணவிகளின் கற்றல் திறன், முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் சமைக்கப்பட்ட உணவு மாதிரி மற்றும் மதிய உணவு சமைக்கப்பட்ட உணவு, குடிநீர் வசதிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், ஒசூர் சார் ஆட்சியர் பிரியங்கா ஒசூர் மாநகராட்சி , துணை மேயர் ஆனந்தையா, தளி ஒன்றிய குழு தலைவர் திரு.சீனிவாச ரெட்டி, ஒன்றிய செயலாளர் திவாகர் , முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் வீரா ரெட்டி, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்திற்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் சார்பில்

# ரூ.25 லட்சம் மதிப்பில் நிவாரணப் பொருட்கள்!

## 3 லாரிகளில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அனுப்பி வைத்தார்

காஞ்சிபுரம், டிச. 24 -

கடும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்ட மக்களுக்கு உதவிடும் வகையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் சார்பில் ரூ. 25 லட்சம் மதிப்பிலான நிவாரணப் பொருட்களை மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான தா.மோ. அன்பரசன் நேற்று கொடி அசைத்து 3 லாரிக ளில் அனுப்பி வைத்தார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ. 25 லட்சம் மதிப்புள்ள அரிசி மற்றும் மளிகை சாமான்கள் உள்ளிட்ட நிவாரண பொருட்களை அமைச்சர் தா. மோ. அன்பரசன் 3 லாரிகள் மூலம் தூத்துக்குடிக்கு அனுப்பி வைத்தார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த சில நாட்களுக்கு முன் பெய்த அதிக கன மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பொருட்களை மாவட்டங்கள் தோறும் அனுப்பி வைக்கின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்ட திமுக சார்பில் தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ. 25 லட்சம் மதிப்புள்ள நிவாரண பொருட்களை 3 லாரிகள் மூலம் நேற்று பகல் குன்றத்தூர் அண்ணா சிலை அருகில் இருந்து அமைச்சர் தா. மோ. அன்பரசன் கொடியசைத்து வழி அனுப்பி வைத்தார்.

அவர் 3 லாரிகள் மூலம் அனுப்பியுள்ள நிவாரண பொருட்களில் அரிசி மற்றும் மளிகை பொருட்கள் அடங்கிய பாக்கெட்டுகள் அடங்கியிருந்தது.

குன்றத்தூர் நகர மன்ற தலைவர் நகர செயலாளர் கோ சத்தியமூர்த்தி, நகர நிர்வாகிகள் உடனிருந்தனர்

### காஞ்சி மணிமொழியார் தமிழ்ப் பேரவை சார்பில்

# தந்தை பெரியார் 50 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## ந.இளவரசு - ப.மகாலிங்கம் பங்கேற்பு!

சென்னை, டிச.24-

காஞ்சி மணிமொழியார் தமிழ்ப் பேரவையின் சார்பில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 50ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சி சென்னை கோடம்பாக்கம் என்.எஸ். கே சாலையில் அமைந்துள்ள மணிமொழியார் வணிக வளாகத்தில் உள்ள குறளகத்தில் இன்று (24.12.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணியளவில் நடைபறவுள்ளது.

இந்நிகழ்வையொட்டி பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் மற்றும் திராவிட இயக்க முன்னோடிகளின் நிழற்படங்கள் மற்றும் சிறப்புத் தகவல்கள் காட்சிப் படுத்தப்படவுள்ளன.

இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளை காஞ்சி மணிமொழியார் தமிழ்ப் பேரவையின் புரவலர் ந. இளவரசு, செயலாளர் பேராசிரியர் ப.மகாலிங்கம், இணைச் செயலாளர் புலவர் ஆசி.திருமாலடிமை, நிர்வாகக்குழு உறுப்பினர் பன்மொழிக் கவிஞர் எழில் வேந்தன், 'செம்மொழி' ச.மணிவண்ணன் மற்றும் நிர்வாகிகள் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளனர். அனைவரும் வருகை தந்து நிகழ்ச்சியை சிறப்பிக்க வேண்டுகிறோம்.



மாதவரத்தில் சென்னை குடிநீர் வழங்கல் லாரி ஓட்டுநர்களுக்கு வடக்குப் பகுதிச் செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. கா. தாமரைச் செல்வன், ஆர்.பாபு உள்ளிட்டோர் உடனுள்ளனர்.

### புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் - மாதவரத்தில்

# சென்னை குடிநீர் வடிகால் வாரிய லாரி ஓட்டுனர்களுக்கு நிவாரண பொருட்கள்!

## கா. தாமரைச்செல்வன் - ஆர். பாபு பங்கேற்பு.

சென்னை, டிச. 24 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் , மாதவரம் வடக்கு பகுதிக் முக சார்பில், சென்னை குடிநீர் வாரிய லாரி ஓட்டுனர்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. சமீபத்தில் பெய்த மழை மற்றும் புயல் காரணமாக பாதிக்கப்பட்ட அனைத்து தரப்பு மக்களுக்கும், தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நிவாரண பொருட்கள் வழங்கப் பட்டு வருகின்றன.

அந்த வகையில் மாதவரம் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட மணலி மண்டலத்தில் உள்ள சென்னை குடிநீர் வடிகால் வாரிய லாரி ஓட்டுநர்கள் மழைக் காலங்களில் அனைத்து பகுதிகளுக்கும் தங்கு தடை இன்றி குடிநீர் வினியோகம் செய்தனர்.

இவர்களுக்கு மாத்தூர் 19 ஆவது வட்ட சென்னை குடிநீர் வடிகால் வாரிய பணிமனையில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில், அரிசி, போர்வை உள்ளிட்ட நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டன. 19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில், மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார், ஜி. ராஜேஷ் கண்ணன், முகமது முஸ்தபா ஆகியோர் முன்னிலையில்,காசி பிரபு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

புயல் மழை காலங்களில் எந்த விதமான விடுப்பும் எடுக்காமல் தொடர்ந்து வார்டு வாரியாக குடிநீரை சீராக விநியோகம் செய்த தங்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கிய திமுகவினருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களுக்கும் குடிநீர் வடிகால் வாரிய ஓட்டுனர்கள் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.


5 ஆம் ஆண்டு நினைவு நாள்





பெரும்பாக்கம் S.தட்சணாமூர்த்தி
அவர்களின் இளையமகன்
த.தமிழ்நேசன்
மாவட்ட பிரதிநிதி [ காஞ்சி வடக்கு மாவட்டம் ] தி.மு.க
பார்த்த முகங்கள் கண்னை
விட்டு பிரிந்தாலும் பழகிய
இதயம் செஞ்சை விட்டு பிரிவதில்லை
இந்நாளில் நீ எங்களை விட்டு பிரிந்தாலும்
இன்றும் உன் நினைவுகளோடு
வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.
த.தமிழ்நேசன்
தோற்றம் : 05.03.1976 மறைவு : 24.12.2018
இங்ஙனம்
குடும்பத்தினர்



தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிடுவதற்காக காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ரூ.25 லட்சம் மதிப்பிலான அரிசி, மளிகை உள்ளிட்ட பொருட்களை மக்களுக்கு வழங்குவதற்காக காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் குன்றத்தூரில் இருந்து கொடியசைத்து அனுப்பி வைத்தார். அருகில் நகர மன்றத் தலைவர் கோ. சத்தியமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (23.12.2023) தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் ஒன்றியம், ஏரல் பேரூராட்சி பகுதியில் குரும்பல் என்னும் இடத்தில், திருச்செந்தூர், பாளையம்கோட்டை செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள மேம்பாலம் கனமழையினால் அடித்துச் செல்லபட்டதையொட்டி, தற்போது அணுகுசாலை போர்க்கால அடிப்படையில், அமைக்கப்பட்டு வரும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர், மற்றும் பொதுப்பணித்துறை சிறப்பு அலுவலர் இரா.விஸ்வநாத் ஆகியோர் உள்ளனர்.

கடந்த 5 ஆண்டுகளில்

# இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர நிலக்கரியின் மதிப்பு எவ்வளவு?

## மக்களவையில் கழக உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, டிச. 24 -

கடந்த ஐந்தாண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்ட உயர் தர நிலக்கரியின் மொத்த அளவு மற்றும் மதிப்பு (இந்திய ரூபாயில்) குறித்தும் வரும் காலங்களில் இறக்குமதி நிலக்கரியை நம்பியிருப்பதைக் குறைக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்தும் நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உயர்தர நிலக்கரியை போதுமான அளவு வழங்குவதற்கு அரசு தனியார் நிறுவனங்களைச் சார்ந்துள்ளது என்பது உண்மையா? அப்படியானால், அதன் விவரம் கடந்த ஐந்தாண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்ட உயர் தர நிலக்கரியின் மொத்த அளவு மற்றும் மதிப்பு (இந்திய ரூபாயில்) ஆண்டு வாரியாக வரும் ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியை நம்பியிருப்பதைக் குறைக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

பல்வேறு தொழில்துறைகளுக்கான உயர் தர நிலக்கரியின் தேவை மற்றும் விநியோகத்தை பூர்த்தி செய்ய போதுமான நடவடிக்கைகளை எடுப்பதில் கார்பன் வெளியேற்றம் குறைப்பதற்கான அர்ப்பணிப்பின் காரணமாக ஒன்றிய அரசு ஏதேனும் சிக்கலை எதிர்கொள்கிறதா?

அப்படியானால், உயர் தர நிலக்கரியின் மொத்த பற்றாக்குறையின் விவரங்கள் மற்றும் இது தொடர்பாக அரசு எடுத்த தீர்வு நடவடிக்கை என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் நாடாளுமன்ற விவகாரங்கள், நிலக்கரி மற்றும் சுரங்கங்கள் துறை அமைச்சர் பிரல்ஹத் ஜோஷி எழுத்துப் பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உயர்தர நிலக்கரியை போதுமான அளவு வழங்குவதற்கு அரசு தனியார் நிறுவனங்களை சார்ந்திருக்கவில்லை. எனவே, தற்போதைய இறக்குமதிக் கொள்கையின்படி, நிலக்கரி திறந்த பொது உரிமத்தின் (Open General Licence) கீழ் வைக்கப்படுகிறது, மேலும் நுகர்வோர் அவர்கள் விரும்பும் மூலத்திலிருந்து நிலக்கரியை தங்கள் ஒப்பந்த விலையின்படி பொருந்தும் வரியைச் செலுத்தி இறக்குமதி செய்யலாம்.

நிலக்கரி இறக்குமதியைக் குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (பட்டியல் இணைப்பு)

(i) உள்நாட்டில் நிலக்கரி உற்பத்தியை மேம்படுத்துவதில் உந்துதல் உள்ளது, இது தன்னிறைவை அடைவதற்கும் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதற்கும் முக்கியமாகும். 2022-23 ஆம் ஆண்டில், நிலக்கரி உற்பத்தி முந்தைய ஆண்டை விட 14.77% அதிகரித்துள்ளது.

2023 நவம்பர் வரையிலான நடப்பு ஆண்டில், உள்நாட்டு நிலக்கரி உற்பத்தி கடந்த ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடுகையில் 13% அதிகரித்துள்ளது.

நடப்பு நிதியாண்டில், 1012.14 மில்லியன் டன் நிலக்கரி உற்பத்தி இலக்கு. அதேபோல், 2025-26, நிலக்கரி இந்தியா லிமிடெட் (சிஐஎல்) மட்டும் ஒரு பில்லியன் டன்களை உற்பத்தி செய்யும்.

(ii) உள்நாட்டில் நிலக்கரி உற்பத்தியை அதிகரிக்க எடுக்கப்பட்ட முக்கிய முயற்சிகளில் ஒற்றை சாளர அனுமதி, சுர ங்கங்கள் மற்றும் கனிமங்கள் (வளர்ச்சி மற்றும் ஒழுங்கு முறை) சட்டம், 1957 திருத்தம் ஆகியவை அடங்கும் இறுதி பயன்பாட்டு ஆலை, MDO மாதிரி மூலம் உற்பத்தி, மேற்பரப்பு சுரங்கம், தொடர்ச்சியான சுரங்கம் போன்ற நவீன தொழில் நுட்பங்களின் பயன்பாடு அதிகரிப்பு, புதிய திட்டங்கள் மற்றும் ஏற்கனவே உள்ள திட்டங்களை விரிவாக்கம், மற்றும் தனியார் நிறுவனங்கள் / பொதுத் துறை நிறுவனங்களுக்கு நிலக்கரி தொகுதிகள் ஏலம். வணிக சுரங்கத்திற்கு 100% அன்னிய நேரடி முதலீடு அனுமதிக்கப்படுகிறது. இந்த முயற்சிகள் அனைத்தும் உற்பத்தி மேம்பாடு மற்றும் இறக்குமதி குறைப்புக்கு வழிவகுத்தன. ஏல முறை/வணிக நிலக்கரி ஏலம் மூலம் உற்பத்தி தொடங்கப்படாமல் இருந்திருந்தால், சிஏஜிஆர் வளர்ச்சி விகிதத்தின்படி 150.00 மெட்ரிக் டன் நிலக்கரியை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும், ஆனால் FY 2324. ஏப்ரல் செப்டம்பரில் 125.21 மெட்ரிக் டன்களை மட்டுமே இறக்குமதி செய்துள்ளோம்.

(iii) நிலக்கரி அமைச்சகம், மின்சார அமைச்சகம், ரயில்வே அமைச்சகம், கப்பல் அமைச்சகம், வர்த்தக அமைச்சகம், எஃகு அமைச்சகம், ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய நிலக்கரி இறக்குமதி மாற்றத்துக்காக ஒரு இடைஅமைச்சகக் குழு (IMC) அமைக்கப்பட்டுள்ளது. சுரங்கங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகம் (MSME), தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறை (DPIIT), மத்திய மின்சார ஆணையம் (CEA), கோல் இந்தியா லிமிடெட், SCCL, பாரதீப் போர்ட் டிரஸ்ட், விசாகப்பட்டினம் போர்ட் டிரஸ்ட் மற்றும் கொல்கத்தா துறைமுகம் .

இந்தக் குழு, அந்தந்த துறையின் நிலக்கரி நுகர்வோரை நிலக்கரி இறக்குமதியை அகற்றுவதை ஊக்குவிக்க வழிகாட்டும் வகையில், நிர்வாக அமைச்சகங்களுடன் ஒரு உயர் மன்றத்தில் விவாதங்களுக்கு ஒரு தளத்தை வழங்குகிறது.

தற்போதைக்கு, நாட்டில் நிலக்கரி தேவையின் பெரும்பகுதி உள்நாட்டு உற்பத்தி மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது. இருப்பினும், இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி அடிப்படையிலான (ICB) மின் உற்பத்தி நிலையங்களால் பயன்படுத்தப்படும் கோக்கிங் நிலக்கரி, ஆந்த்ராசைட் மற்றும் குறைந்த சாம்பல் வெப்ப நிலக்கரி போன்ற சில உயர் தர நிலக்கரி, அவற்றின் உள்நாட்டு உற்பத்தி கிடைக்காததால், இறக்குமதி செய்வதற்கு அவசியமானது.

உள்நாட்டில் நிலக்கரி உற்பத்தியை அதிகரிப்பதிலும், அதை அகற்றுவதிலும் அரசின் கவனம் உள்ளது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் பகுதியில்

# சாலைகள் - பாலங்கள் சீரமைப்புப் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு செய்தார்!

சென்னை, டிச.24-

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் பகுதியில் நடைபெற்றுவரும் சாலைகள் மற்றும் பாலங்கள் சீரமைப்புப் பணிகளை, இன்று 6வது நாளாக, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார்.

அதிகனமழையினால் பாதிக்கப்பட்டுள்ள, தூத்துக்குடி மாவட்டத்தின் திருவைகுண்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சேதமடைந்த சாலை சீரமைப்பு பணிகள் மற்றும் உடைந்த பாலங்களுக்குப் பதிலாக மாற்று பாதை அமைக்கும் பணிகளை, 6வது நாளாக, நேற்றும் (23.12.2023), பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, ஆய்வு செய்தார்.

அமைச்சர் அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பின்போது கூறியதாவது:-

தூத்துக்குடியில் 112 இடங்களில், சாலைகளில் உடைப்புகள் ஏற்பட்டு, சாலைகள் அடித்து செல்லப்பட்டு, போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டிருந்தது. அதில், 84 இடங்களில் சாலைகள் செப்பனிடப்பட்டு, போக்குவரத்து சரிசெய்யப்பட்டுள்ளது என்பதை அமைச்சர் தெரிவித் தார்.

திருச்செந்தூர் - பாளையங்கோட்டை செல்லும் சாலைகளில், மூன்று இடங்களில் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்து இருந்தது. தற்போது இரண்டு இடங்களை நெடுஞ்சாலைத்துறை மூலம் சரிசெய்யப்பட்டு, போக்குவரத்து சீர்செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒரு இடத்தில் 3 மீட்டர் நீளத்திற்கு சாலை உடைப்புகள் ஏற்பட்டு, சாலை துண்டிக்கப்பட்டுள்ளது. இதனை சீர்செய்ய, கிராவல் இங்கு எடுக்க முடியாத நிலை இருப்பதால், வெளியிலிருந்து கிராவல் கொண்டுவரப்பட்டு, நேற்று முதல் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பணிகள் நிறைவடைந்தவுடனேயே, திருச்செந்தூர், பாளையங்கோட்டை செல்லும் வழித்தடத்தில் போக்குவரத்து நடைபெறும் என்பதையும் தெரிவித்தார்.

ஆத்தூர் பாலமும், ஏரலுக்கு அருகே இருக்கின்ற குரும்பல் பாலமும் ஏறத்தாழ ரூ.19.94 கோடி மதிப்பீட்டில், அதிமுக. ஆட்சியில் கட்டப்பட்டது. அணுகு சாலை வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்டு விட்டது. அப்பகுதியில் தரைப்பாலம் ஒன்று உறுதியாக இருக்கிறது என்பதை விளக்கி கூறினார்.

நெடுஞ்சாலைத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் அனைவரும் மேற்கண்ட இடங்களில் நடைபெற்றுவரும் பணிகளை ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

தூத்துக்குடியில் இருந்து திருநெல்வேலி செல்லும் வழியில் உள்ள பாலம் தேசிய நெடுஞ்சாலை அலகினை சார்ந்தது. அதில் ஒரே ஒரு பில்லர் மட்டும் கீழே இறங்கியுள்ளது. பொறியாளர்கள் அடங்கிய தொழில்நுட்பக் குழுவினை உடனடியாக வரவழைத்து ஆய்வு செய்ய அறிவுறுத்தியுள்ளதாக தெரிவித்த அமைச்சர், போக்குவரத்து எவ்வித பாதிப்பும் இல்லாமல் தரைபாலம் வழியாக வாகனங்கள் சென்று வருகின்றன என்பதையும் குறிப்பிட்டார்.

இயற்கை சீற்றங்கள் ஏற்படும் போதும் முதலில் பாதிக்கப்படுவது சாலைகள் தான். இதுவரை இல்லாத அளவுக்கு தூத்துக்குடியில் 95 சென்டி மீட்டர் பெய்ததால், அதிகம் பாதிக்கப்பட்டது சாலைகள்தான். நெடுஞ்சாலைத்துறையை பொறுத்த வரையில், சாலைகளை தற்காலிகமாக செப்பனிடுவது என்பது உடனடியாக மேற்கொள்ள முடியும். நிரந்தரமாக சரிசெய்ய வேண்டுமென்றால், கோட்டப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் தலைமைப் பொறியாளர்கள் ஆகியோர் ஆய்வு செய்து, எந்த வகையில் நிரந்தரமாக சரிசெய்ய முடியும் என்பதை முடிவு செய்து, அதன் அடிப்படையில், திட்ட மதிப்பீடு தயார் செய்து, திட்ட மதிப்பீட்டிற்கு அதற்கான குழு ஒப்புதல் அளித்தவுடன், நிதித்துறையின் ஆலோசனைப் பெற்று, ஒப்பந்தம் கோரப்பட்டு, முதலமைச்சர் அவர்களிடம் ஆணை பெற்றுதான் நிரந்தர தீர்வு ஏற்படுத்த முடியும் என்பதை விளக்கி கூறினார்.

நெடுஞ்சாலைத் துறையை பொறுத்த வரையில், சாலைகள் ரூ.1,000 கோடி அளவிற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை தெரிவித்த அமைச்சர், திருநெல்வேலி மாவட்டத்தில் 46 சாலைகளும், தூத்துக்குடி மாவட்டதில் 112 சாலைகளும், தென்காசி மாவட்டத்தில் 13 சாலைகளும், விருதுநகர் மாவட்டத்தில் 13 சாலைகளும், நாகர்கோவிலில் 5 சாலைகளும் சேதமடைந்துள்ளன என்று தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வுகளின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் பிரதீப் யாதவ், பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் பி.சந்தரமோகன், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர், மற்றும் பொதுப்பணித்துறை சிறப்பு அலுவலர் இரா.விஸ்வநாத் மற்றும் நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர்கள் உடனிருந்தனர்.

ஆடு, மாடு, கோழி, மீன் ஆகியவற்றை வளர்க்கும் விவசாயிகளுக்கு வட்டியில்லா கூட்டுறவுக் கடன்

# 2023 - 24 நிதியாண்டில் 1500 கோடி ரூபாய் வழங்கப்படும்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தகவல்!



சென்னை, டிச.24 -

அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் பொதுமக்களுக்கு பல்வேறு வகையான கடன்களை வழங்கி வருகின்றன. வேளாண் கடன் அட்டை (KCC) திட்டத்தின் கீழ் கால்நடை வளர்ப்பு (ஆடு, மாடு கோழி) மீன் வளர்ப்பு மற்றும் அவை சார்ந்த தொழில்களில் ஈடுபடும் விவசாயிகளுக்கு வட்டியில்லா கூட்டுறவு கடனாக 1500 கோடி ரூபாய் அளவில் வழங்கப்படும் என முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தல்களுக்குகிணங்க 2023-24 வேளாண் மற்றும் உழவர் நலத்துறை மானியக் கோரிக்கையின் போது அமைச்சர் (வேளாண் மற்றும் உழவர் நலத்துறை) அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் அரசாணை (நிலை) எண். 168, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை நாள் 18.12.2023 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி 2023-24 ஆம் நிதியாண்டிற்கு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் கால்நடை வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்பு மற்றும் அவை சார்ந்த தொழில்களுக்கு வழங்கப்படும் வட்டியில்லா நடைமுறை மூலதனக் கடன்களுக்கு ஆண்டு குறியீடாக ரூ. 1500 கோடி (ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு கோடி) நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே, கால்நடை வளர்ப்பு (ஆடு, மாடு கோழி) மீன் வளர்ப்பு மற்றும் அவை சார்ந்த தொழில்களில் ஈடுபடும் விவசாயிகள் தொடர்புடைய கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகளை அணுகி இத்திட்டத்தின் மூலம் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

லம்பாடி இன மக்களை

# பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும்!

## ஒன்றிய அமைச்சரிடம் தருமபுரி எம்.பி. டாக்டர் செந்தில்குமார் வலியுறுத்தல்!



புதுடெல்லி, டிச. 24 -

தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் செந்தில்குமார் “குருமா, குருமன், குரும்பா, குருமன் கவுண்டர், குரும்பன் மற்றும் குரும்பர் ஆகிய மக்களை குருமன்ஸ் என பழங்குடி பட்டியலில் தமிழக அரசின் முன்மொழிவை விரைவுபடுத்தவும் மற்றும் லம்பாடி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பழங்குடி பட்டியலில் சேர்க்க வேண்டும்” என்ற கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை ஒன்றிய பழங்குடி நலன் அமைச்சர் அர்ஜுன் முண்டாவை 20.12.2023 அன்று நேரில் சந்தித்து கோரிக்கைவிடுத்தார்.

தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் செந்தில்குமார் ஒன்றிய பழங்குடி நலன் அமைச்சர் அர்ஜுன் முண்டாவை நேரில் சந்தித்து “குருமா, குருமன், குரும்பா, குருமன் கவுண்டர், குரும்பன் மற்றும் குரும்பர் ஆகிய மக்களை குருமன்ஸ் என பழங்குடி பட்டியலில் தமிழக அரசின் முன்மொழிவை விரைவுபடுத்தவும் மற்றும் லம்பாடி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பழங்குடி பட்டியலில் சேர்க்க வேண்டும் கோரிக்கை அடங்கிய கடிதத்தின் விவரங்கள் பின்வருமாறு.

பழங்குடி சமூகமான ‘குருமன்ஸ்’ என்ற பழங்குடி சமூகத்தின் ஒத்த சொற்களை பட்டியல் பழங்குடியினர் பட்டியலில் அங்கீகரித்து இணைப்பதற்கான நீண்டகால முயற்சி தொடர்பாக எழுதுகிறேன். S.T பட்டியலில் குறும்பர் (S.T) என்ற பெயருக்கு இணையான பெயராக குருமா, குருமன், குரும்பன், குரும்பகவு ண்டர், குறும்பன் மற்றும் குரும்பர் சேர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது மற்றும் ஒன்றிய அமைச்சருக்கும் இது பற்றி நன்கு தெரியும்.

ஒன்றிய அரசுக்கு குருமன்ஸ் (எஸ்டி) பட்டியலில் 6 ஒத்த பெயர்களைச் சேர்ப்பதற்காக தமிழ்நாடு அரசு அனுப்பிய விரிவான பரிந்துரை செய்து இருப்பதாக அறிவேன்.

சவால்கள், வரலாற்று ஆவணங்கள் மற்றும் அரசாங்க ஆதாரங்கள் அவர்களின் உரிமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்த என்னைத் ஈடுபடச்செய்தது பழங்குடி சமூகத்தின் சார்பாக நான் இந்த விஷயத்தில் எடுத்த நடவடிக்கைகள் மற்றும் முயற்சி களை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

12.03.2021 அன்று நாடாளுமன்றத்தின் பூஜ்ஜிய நேரத்தில் குருமன்ஸ்களின் இணையான சொற்களையும் எஸ்டி பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று இந்தப் பிரச்சினையை எழுப்பி, அதற்குப் பதிலாக 12.04.2021 அன்று ஒன்றிய பழங்குடி நலன் அமைச்சர் அலுவலகத்திலிருந்து இந்த விவகாரம் பரிசீலனையில் இருப்பதாகக் கடிதம் வந்தது.

07.04.2022 அன்று குருமா, குருமன், குரும்பா, குரும்பகவுண்டர், குரும்பன், குரும்பர் ஆகிய பெயர்களை எஸ்டி பட்டியலில் குருமன்ஸ்களுக்கு இணையான வார்த்தைகளாக அங்கீகரித்து பட்டியலிடுவதை நோக்கமாகக் கொண்டு, நாடாளுமன்றத்தில் தனிப்பட்ட உறுப்பினர் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது. 21.12.2022 அன்று குருமன்ஸ் ஒத்த பெயர்களை எஸ்டி பட்டியலில் சேர்க்க நாடாளுமன்றத்தில் பேசப்பட்டது. 04.07.2023 அன்று அதிதிராவிடர் மற்றும் பழங்குடி நல வாரியம் இயக்குநர், டிஆர்சி, ஊட்டி ஆகியோருக்கு, தேவையான அறிக்கைகளை உங்கள் அலுவலகத்திற்கு விரைவாக அனுப்புமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும் பட்டியல் பழங்குடியினர் பட்டியலில் “லம்பாடி” சமூக மக்களை அங்கீகரித்து இணைப்பதற்கான நீண்டகால முயற்சி தொடர்பாக டாக்டர் செந்தில்குமார் கடிதம் பின்வருமாறு. தமிழ்நாட்டில் உள்ள லம்பாடி கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக அறிவிக்கப்பட்டுள்ளனர், ஆனால் அவர்கள் அண்டை மாநிலங்களான கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் பட்டியல் சமூகத்தில் உள்ளனர்.

தமிழ்நாட்டில் லம்பாடி மக்களின் மொத்த மக்கள் தொகை சுமார் 2 லட்சம் ஆகும் அவற்றில் தருமபுரியில் பாராளுமன்ற தொகுதியில் மட்டும் 50,000 மக்கள் அரூர் (சிட்லிங்கி தண்டா, சிட்லிங்கி பஞ்சாயத்து), பென்னாகரம் மற்றும் தர்மபுரி தாலுகா மற்றும் மேட்டூர் தாலுகாவில் (லக்கம்பட்டி) வசித்து வருகின்றனர். இந்தச் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றிய எனது தனிப்பட்ட அறிமுகம், அவர்களைச் சேர்ப்பதற்காக தொடர்ந்து வாதிடுவதற்கு என்னை இட்டுச் சென்றது. பழங்குடி சமூகத்தின் சார்பாக நான் இந்த விஷயத்தில் எடுத்த நடவடிக்கைகள் மற்றும் முயற்சிகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 21.12.2022 அன்று லம்பாடி சமுதாய மக்களை எஸ்டி பட்டியலில் சேர்க்க நாடாளுமன்றத்தில் பேசினேன் மற்றும் 12.08.2023 அன்று லம்பாடி சமூகத்தை எஸ்டி பட்டியலில் அங்கீகரிக்கும் நோக்கில், நாடாளுமன்றத்தில் தனிப்பட்ட உறுப்பினர் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது.

1969 ஆம் ஆண்டில், எஸ்சி/எஸ்டியைச் சேர்ப்பது மற்றும் விலக்குவது தொடர்பான மசோதா மீதான கூட்டுக் குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் லம்பாடிகளை எஸ்டி பட்டியலில் சேர்க்கப் பரிந்துரைத்தது. சென்னை பல்கலைக்கழக மானுடவியலாளர்கள் நடத்திய மானுடவியல் ஆய்வின் அடிப்படையில் லம்பாடிகளை ST பட்டியலில் சேர்க்க பரிந்துரைத்துள்ளனர். அனைத்து ஆதாரங்களையும் இணைத்து அமைச்சர் பார்வைக்கு சமர்ப்பித்துள்ளார்.

குருமா, குருமன், குரும்பா, குரும்பகவு ண்டர், குரும்பன், குரும்பர் மற்றும் லம்பாடி சமூகத்தை ஆகிய பெயர்களை ST பட்டியலில் இணைத்திருப்பது வெறும் அடையாளச் செயலாக இல்லாமல், வரலாற்று அநீதிகளைச் சரி செய்வதற்கான ஒரு படியாகும். உங்கள் உடனடி நடவடிக்கை சமூகத்திற்கு மிகவும் பயனளிக்கும், சமூக கட்டமைப்பில் அவர்களின் சரியான இடத்தைப் பெற வழி வகுக்கும் என்று ஒன்றிய பழங்குடி நலன் அமைச்சர் அர்ஜுன் முண்டாவை நேரில் சந்தித்து கடிதம் வாயிலாக கோரிக்கைவிடுத்தார்.



லம்பாடி இன மக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்தி ஒன்றிய பழங்குடி நல அமைச்சர் அர்ஜுன் முண்டாவிடம் தருமபுரி நாடாளுமன்றத் தொகுதி கழக உறுப்பினர் டாக்டர் செந்தில் குமார் கடிதம் வழங்கினார்.



தலைமைச் செயலாளர் சிவ்தாஸ்மீனா, நேற்று (23.12.2023) தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்த அதிகனமழை காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள், எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் செங்குளம் ஓடை முதல் உப்பாத்து ஓடை வரை செல்லும் மழை நீர் வடிகால் பணிகளை பார்வையிட்டார். உடன் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### அதானி, அம்பானிகளுக்கு பல லட்சம் கோடி மக்கள் வரிப்பணத்தை அள்ளித்தரும் ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் மீது மனிதாபிமானம் எள் அளவும் இல்லாமல் வஞ்சிக்கிறது!

# மலிவான அரசியல் ஆதாயம் தேடுகிறார் ஒன்றிய நிதி அமைச்சர்!

## இந்தியக் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கடும் கண்டனம்!

சென்னை, டிச. 24 -

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களுக்கு விடுத்துள்ள செய்தி அறிக்கை வருமாறு:-



பா.ஜ.க. ஒன்றிய அரசின் நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் “இண்டியா” கூட்டணி உருவாக்கி வரும் அரசியல் பேரலைகளை கண்டு அரண்டு போய் பிதற்றி வருகிறார்.

வடகிழக்கு பருவமழை காலங்களில், வங்கக்கடலில் காற்றழுத்த மண்டலத்தால் உருவாகும் இயற்கை சீற்றம் குறித்தும், அதனை எதிர்கொள்ளும் பாதுகாப்பு மற்றும் தடுப்பு ஏற்பாடுகள் செய்திருந்த, தமிழ்நாடு அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பேரழிவின் விளைவுகளை பெருமளவு கட்டுப்படுத்தி குறைத்தது என்பதை நிர்மலா சீத்தாராமன் மூடி மறைக்கிறார்.

கடந்த 2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வர்தா புயல் இயற்கைச் சீற்றத்தால் ஏற்பட்ட பேரிடர் இழப்புகளில் கற்றுக் கொண்ட படிப்பினை அடிப்படையில் உடனடி திட்டங்கள், தொலை நோக்கு நிரந்தர திட்டங்கள் என்ற முறையில் விரிவான பாதுகாப்புத் திட்டங்கள் ஒரு லட்சத்து, 27 ஆயிரத்து 692 கோடி மதிப்பில் தயாரித்து அதற்கான நிதியை வழங்குமாறு தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசிடம் கேட்டுக் கொண்டது. ஆனால், ஒன்றிய அரசு வெறும் 4.61 சதவீத நிதி மட்டுமே வழங்கி தமிழக மக்களை வஞ்சித்து விட்டது. தற்போது ஏற்பட்டிருக்கும் பேரிடர் இழப்புகளை எதிர்கொள்ள தமிழ்நாடு அரசு 21 ஆயிரத்து 692 கோடி ரூபாய் நிதியுதவி கோரியுள்ள நிலையில், ஒன்றிய அரசின் வன்மம் மேலும் தொடரும் என்பதையே நிதி அமைச்சர் வெளிப்படுத்துகிறார்.

தென் மாவட்டங்களுக்கு ஏற்படும் பெருமழை ஆபத்து டிசம்பர் 12 ஆம் தேதியே அம்மையார் அறிந்தது உண்மை எனில், முக்கியத்துவம் வாய்ந்த அந்தச் செய்தியை ஏழு நாள் கழித்து, ஊடகங்கள் வாயிலாக வெளியிடுவது ஏன்?

தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை பெரு மாநகர் மாவட்டம் உட்பட ஒன்பது மாவட்டங்கள் இயற்கை சீற்றத்தால் நிலைகுலைந்து கிடக்கும் நிலையில், தமிழ்நாடு அரசு மன்றாடிக் கேட்ட பேரிடர் நிவாரண நிதியை வழங்க கவனம் செலுத்தாத ஒன்றிய நிதி அமைச்சர், வழக்கமாக வழங்கப்படும் பேரிடர் நிதி தவிர, தற்போது ஏற்பட்டிருக்கும் பேரிடரை எதிர் கொள்ள, தமிழ்நாடு கோரியுள்ள கூடுதல் நிதி இல்லை என கை விரித்து நிற்பதற்கு நிதியமைச்சர் வெட்கப்பட வேண்டும்.

அதானி, அம்பானி போன்ற பன்னாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு பல லட்சம் கோடி மக்கள் வரிப்பணத்தை அள்ளி, அள்ளித் தரும் பா.ஜ.க. ஒன்றிய அரசு, மாற்றுக் கருத்தும் கொள்கையும் கொண்ட மாநில அரசுகளுக்கு எதிராக ஆளுநர் மாளிகைகளும், அரசியலமைப்பு நிறுவனங்களும் ஏவி விடப்பட்டிருப்பதை நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்த வரிசையில் தேசிய பேரிடர் மீட்புக் குழுக்களையும் சேர்த்துக் கொண்டார்களா?

அடர்த்தியான அரசியல் மற்றும் அரசுப் பணிகளுக்கு மத்தியில் முதலமைச்சர், பிரதமரை சந்தித்து முறையிட நேரம் கேட்டபோது, மாற்றி, மாற்றி கூறிய போதும் நள்ளிரவு வரை காத்திருந்து, பிரதமரிடம் விரிவாக எடுத்துக் கூறியதை, நிதிய மைச்சர் அறிந்து கொள்ளாதது ஏன்?

நாடாளுமன்ற பாதுகாப்பில் ஏற்பட்ட படுதோல்வி, இதற்காக நியாயமும் விளக்கமும் கேட்ட 146 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்த ஜனநாயக படுகொலை, மாநில உரிமைகளை பறித்து, மையத்தில் குவிக்கும் அதிகார வெறி என எதேச்சதிகார ஒன்றிய அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழும் சூழலில், “இண்டியா” கூட்டணி கண்டு நிதியமைச்சர் ஆத்திரமடைந்து தமிழ்நாடு முதலமைச்சர் மீது ஆசிட் வார்த்தைகளை அள்ளி வீசுகிறார்.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் வெள்ளம் வடியாத நிலையில், தென் மாவட்டங்களில் பெரு மழையால் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர்கள் விளைந்த நிலையில் நீரில் மூழ்கியும். வாழைகள், பயிறு வகைகள், சிறு கிழங்குகள் உள்ளிட்ட பயிர்கள் சேதமடைந்து விட்டன. நூற்றுக்கணக்கான கால் நடைகள் மழை வெள்ளத்தால், அடித்துச் செல்லப்பட்டுள்ளது. ஏரிகள், குளங்கள், கண்மாய்களில் ஏற்பட்ட உடைப்புகள், சாலைகள் துண்டிப்பு என வரலாறு காணாத சேதாரத்தை சீர்படுத்தி வரும் நேரத்தில், அதற்கு தேவையான பேரிடர் கால நிதியுதவி செய்து உதவும் மனிதாபிமானம் எள் அளவும் இல்லாமல், ஊடகங்கள் வழியாக மலிவான அரசியல் ஆதாயம் தேடும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கருத்துக்களை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

இவ்வாறு இரா.முத்தரசன், தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## ஹிஜாப் அணிய தடை! திரும்பப் பெறப்படுவதாக முதல்வர் சித்தராமையா அறிவிப்பு!

பெங்களூரு, டிச. 24 -


கர்நாடக மாநிலத்தில் உள்ள கல்வி நிறுவனங்களில் இஸ்லாமிய மாணவிகள் ஹிஜாப் அணிவதற்கு முந்தைய பா.ஜ.க. ஆட்சியில் தடை விதிக்கப்பட்டது.

இதற்கு இஸ்லாமிய அமைப்புகள் உள்பட பல்வேறு தரப்பினர் மத்தியில் கடும் எதிர்ப்பு எழுந்தது.

ஹிஜாப் தடையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டன. இந்த நிலையில், கல்வி நிறுவனங்களில் ஹிஜாப் அணிவதற்கான தடையை திரும்பப் பெறுவதாக கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா அறிவித்துள்ளார்.

---

# ஐயா! நின் நினைவிடத்தில் சூளுரைப்போம்!



ஈரோட்டு நாயகனே! தமிழர் தங்கள்
இனமானச் சூரியனே! எட்டுத் திக்கும்
மார்தட்டிச் சுழன்றுவந்தாய்! மனித னுக்கு
மானமும் அறிவும்தான் அழகே என்றாய்!
கூர்மிக்கச் சிந்தனையால் குரல்கொ டுத்தாய்!
கொட்டாவித் துயில்கலைத்தாய்! எழுச்சி தந்தாய்!
போராடி உரிமைகளைப் பெற்றுத் தந்தாய்!
பொதுப்பணிக்கே கொடைதந்தாய் உனது வாழ்வை!

பாடிவைத்த பழமைகளைச் சாடி வைத்தாய்!
பாமரர்க்கும் பகுத்தறிவை விதைத்தாய்! மூடக்
காடெரித்த யுகக்கனலே! ஐயா, உன்றன்
கைத்தடியின் வளைவிலும்கம் பீரம் உண்டே!
தாடிவைத்த குழந்தைநீ சிரிக்கும் போதில்
தலைமுதல்பா தம்வரைக்கும் மகிழ்ச்சி பொங்கும்!
ஏடெடுத்தே நீ,கணைகள் தொடுக்கும் போதில்
எதிரிகளின் அடித்தளமே நொறுங்கிப் போகும்!

மூன்றுவிழுக் காடுள்ள ஒருகூட் டத்தின்
மூவாயி ரம்வருட ஆதிக் கத்தைச்
சான்றுசொல்லி உலகுக்கே எடுத்து ரைத்தாய்!
சனாதனத்தின் கொடுமைகளைத் தோலு ரித்தாய்!
ஆன்றோராய் சான்றோராய் கல்வி பெற்றே
அடித்தட்டு மக்களையும் உயரச் செய்தாய்!
தோன்றின்நற் புகழோடு தோன்றி வந்தாய்!
தொண்டுசெய்து பழுத்தபழம் ஆகி நின்றாய்!

அலைவைத்த கடலைப்போல் இயங்கி வந்தாய்!
ஆயிரமா? அதற்கதிகம் பிறைகள் கண்டாய்!
வலைவைத்துப் பார்த்தார்கள், அறுத்தெ றிந்து
வலம்வந்தாய் நாடெங்கும்! கொண்டு வந்து,உன்
தலைவைக்க வேண்டும்என்ற நரிக்கூட் டத்தைத்
தரைமட்டம் செய்தாய்! நம் கலைஞ ருக்குச்
சிலைவைத்துப் பேரன்பைப் பொழிந்தாய்! என்றும்
சிதையாத புகழுக்கே புகழ்கொ டுத்தாய்!

தடியெடுத்து நீஅன்று நடந்த தால்தான்
தமிழர்க்கே அறிஞர்அண்ணா கிடைத்தார்! உன்றன்
குடியரசின் உலைக்கூடத் தகிப்பி லேதான்
“ குவளைப்பூ” போர்க்கருவி ஆன தென்பேன்!
திடலுக்குள் மட்டும்நீ இல்லை! கண்ணீர்த்
திவலைகளைத் துடைத்தெறிந்து சொல்வேன், எங்கள்
உடலுக்குள் உயிரணுக்க ளெல்லாம் உள்ளாய்!
உனைவிட்டுத் தமிழர்க்கு வரலா றேது?

அரியார்க்கும் அரியாராய் பிறந்து வந்தாய்!
அடுத்தடுத்துச் சாதனைகள் புரிந்து வந்தாய்!
வரலாற்றில் “ஈழவர்”தம் உரிமை வென்ற
“வைக்கத்தின்” செருக்களத்தை மறக்கப் போமோ?
பெரியார்க்கும் பெரியார்நீ! அதனா லன்றோ
பெண்ணுரிமை முன்னுரிமை காணச் செய்து
சரியான பாதைக்கே அழைத்து வந்தாய்!
சமத்துவம் சமதர்மம் தழைக்கச் செய்தாய்!

வியாபாரக் குடும்பத்தில் பிறந்தாய்! உன்னை
விலைபேச எவராலும் முடிய வில்லை!
நியாயத்தின் வடிவம்நீ, அதனால் உன்னை
நீதிமன்றப் பொய்வலைகள் நெருங்க வில்லை!
தியாகம்நீ செய்யவில்லை! தியாகம் உன்னைச்
செய்தது!நீ தரைவாழ்ந்த உலக வாழ்க்கை
மயானத்தின் முடிவல்ல! காலத் தாலும்
மடியாத சரித்திரத்தின் புதுத்தொ டக்கம்!

நீண்டநெடுந் தொலைநோக்கில் உனது கொள்கை
நீட்சிகண்டு “தளபதி”யின் ஆட்சி கண்டு
தாண்டிமிகக் குதிக்கிற து பகைவர் கூட்டம்!
தலைதூக்கி “மனுதர்மம்” போடும் ஆட்டம்!
மீண்டும்உன்றன் “கைத்தடிக்கு” வேலை வந்து
விட்டதையா! சனாதனத்தை விரட்டு தற்கே!
மூண்டெழுவோம் ஐயா,உன் நினைவி டத்தில்!
முறியடிப்போம் சதியை!எனச் சூளு ரைப்போம்!



கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்.**

---

### வருவாய் மற்றும் பேரிடர் மேலாண் துறை அமைச்சர்

# கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தாயார் அமராவதி அம்மாள் மறைவு!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் மலரஞ்சலி!

விருதுநகர், டிச. 24 -

விருதுநகரில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தாயார் மறைந்த அமராவதி அம்மாள் உடலுக்கு விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

உடன் நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டமன்ற சபாநாயகர் மு.அப்பாவு, அமைச்சர்கள் கே.என். நேரு, ஐ.பெரியசாமி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சு.முத்துசாமி, சக்கரபாணி, பெரியகருப்பன், எஸ்.எஸ். சிவசங்கர், ரகுபதி, மூர்த்தி, ராஜ கண்ணப்பன் ஆகிய அமைச்சர்கள் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், கோ.தளபதி, தங்கப்பாண்டியன், காதர் பாட்ஷா என்ற வெள்ளைச்சாமி, ரகுராமன், அசோகன், பாராளுமன்ற உறுப்பினர்கள் நவாஸ் கனி, தனுஷ் குமார், மாணிக்கம் தாகூர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் ராஜா சொக்கர், வலது கம்யூனிஸ்ட் மாநிலத் தலைவர் முத்தரசன், கம்யூனிஸ்ட் லிங்கம், கம்யூனிஸ்ட் ராமசாமி, கம்யூனிஸ்ட் முருகேசன், கம்யூனிஸ்ட் ஜெயகுமார், தேனி வசந்தன், தி.க.திருப்பதி, செயற் குழு உறுப்பினர் சேர்மன் சுப்பாராஜா, வி.பி.ராசன், தனுஷ்கோடி, ஒன்றிய செயலாளர்கள் காரியாபட்டி செந்தில், திருச்சுழி பொண்ணு தம்பி, சந்தான பாண்டியன், காரியாபட்டி மந்திரி ஓடை கண்ணன், மல்லாக்கினர் முருகேசன், அருப்புக் கோட்டை பால கணேஷ், பொன்ராஜ், ஆவடை அம்மாள், மாவட்ட பொருளாளர் சாகுல் ஹமீது, ராசா அருள்மொழி, ஆர்.கே. துரை, வத்திராயிருப்பு முனியாண்டி, தங்க மாங்கனி நகர் மன்ற தலைவர் தங்கம் ரவி கண்ணன், ராஜபாளையம் பவித்ராசியாம், சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், அருப்புக் கோட்டை சேர்மன் சிவப்பிரகாசம் சுந்தரவல்லி, சாத்தூர் சேர்மன் குருசாமி கடற்கரை ராஜ், மாநில வர்த்தக அணி வனராஜா, சிவகாசி நகர செயலாளர் காளிராஜன், மாநகரச் செயலாளர் உதயசூரியன், ஒன்றிய சேர்மன் விவேகராஜன், முத்துலட்சுமி தங்கராஜ், எம்.ஏ.சந்திரன் வடக்கு மாவட்ட இளைஞரணி கிருஷ்ணகுமார், விளையாட்டு மேம்பாட்டு அணி கே.ஜி.ராஜகுரு, தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி கேகேஎஸ்.எஸ்.ஆர். ரமேஷ், கே.கே.எஸ்.எஸ். ஆர்.நாராயணன், ஒன்றிய துணைச் செயலாளர் குருசாமி, பொதுக்குழு உறுப்பினர் பொ. மதியழகன், மாவட்ட வர்த்தக அணி போஸ் என்ற ஜெயச்சந்திரன், ஒன்றிய சேர்மன் சுமதி ராஜசேகர், பொதுக் குழு உறுப்பினர் சுதாகர், மாவட்ட விவசாய அணி நேஷனல் ராமர், மாவட்ட தொழிலாளர் அணி ஏ.எஸ். கே.ரமேஷ் குமார், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி எல் திருமாறன், நகர துணை செயலாளர் மரியராசு, கலை இலக்கிய பகுத்தறிவு பாசறை மலை ராசன், திண்டுக்கல் தி.மு.க. கிழக்கு மாவட்டச் செயலாளர் சத்தியமூர்த்தி, மாநில விவசாய அணி இணைச் செயலாளர் முத்துராமலிங்கம், மாவட்டச் செயலாளர் மதுரை சேடப்பட்டி மணிமாறன்,

அருப்புக்கோட்டை நகரச் செயலாளர் ஏ.கே. மணி, கோகு லம் எம் தங்கராஜ், செட்டி குறிச்சி கே.வி.கே.ஆர். பிரபாகரன், சீனிவாச பெருமாள், மாவட்ட துணைச் செயலாளர் ஏ.ஆர்.சுபேதா, மண்டல மின்வாரிய தொ.மு.ச. அண்ணாதுரை அழகு ராமானுஜம், வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி மித்ரு நாகேந்திரன், ஒன்றிய துணைச் செயலாளர் குருசாமி, காரியாபட்டி ஒன்றிய செயலாளர் கண்ணன் செல்வம், இளைஞர் அணி அருப்புக்கோட்டை பாபுஜி சூரிய நாராயணன், கல்லூரணி ராஜாமணி நகர் மன்ற தலைவர் மாதவன், தனலட்சுமி, துளசிராமன், நகரவைத் தலைவர் ஸ்ரீராம் காசிராஜன், மகளிர் அணி சுமதி ராமமூர்த்தி, சரஸ்வதி, பாண்டிச்செல்வி, முத்துமாரி, வகிதா ரகுமான், கலாவதி பிர்தவ்ஸ் ராஜா சுதா ராணி, ஆவியூர் செல்வி உமாராணி, சந்துருசன் பேக்கரி முருகன் ப்ரோஸ் கான், ]

நகர இளைஞரணி ஏ எஸ் கே அஜய் குமார், பாசில் பாண்டி யோகராஜ், சதீஷ் சுந்தர் ரங்கராஜ், உஸ்மான் சாதிக் அலி, பாண்டி நகர் சுரேஷ், மாவட்ட தொழிலாளர் அணி பழனிச்சாமி மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் அனைத்து அணியை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

---



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப்பூண்டி தொகுதி கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றியம் சின்ன புலியூர் கிராமத்தில் உள்ள ஷாலிமர்’ பெயிண்ட் தொழிற்சாலை நிர்வாகத்தால் பணிநீக்கம் செய்யப்பட்ட 53 தொழிலாளார்களுக்கு மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் அரிசி, பருப்பு உள்ளிட்ட மளிகைப் பொருட்களை வழங்கினார். உடன் தொழிசங்க நிர்வாகிகள் மு.மணிபாலன், மு,பாஸ்கரன், மு.தினகரன் ஆர்.சிவகுமார், ரவிந்திரன், ப.அறிவழகன், ரோஸ்பொன்னையன் ஷாலிமர் பெயின்ட் தொமுச நிர்வாகிகள் ஜெ.சசிகுமார், எஸ்.லம்போதரன், உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# நாடு முழுவதும் புதிதாக 752 பேருக்கு கொரோனா!

புதுடெல்லி, டிச. 24 -

நாடு முழுவதும் நேற்று முன்தினம் 328 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டு இருப்பதாக ஒன்றிய சுகாதார அமைச்சகம் வெளியிட்ட புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதேபோல், கேரளாவில் நேற்று முன்தினம் ஒருவர் கொரோனா தொற்று பாதித்து பலியானதாகவும் ஒன்றிய சுகாதார அமைச்சகம் குறிப்பிட்டிருந்தது. இந்நிலையில் ஒன்றிய சுகாதார அமைச்சகம் நேற்று வெளியிட்ட புள்ளிவிவரங்களில், நாடு முழுவதும் புதிதாக 752 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கையானது, நேற்று முன்தினம் வெளியிட்ட புள்ளி விவரங்களுடன் ஒப்பிடுகையில் 2 மடங்கு அதிகமாகும். அதேபோல் 7 மாதங்களில் இல்லாத அளவுக்கு புதிய உச்சமாகும். மேலும் நேற்றைய புள்ளி விவரங்களில் கொரோனா பாதித்து 4 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்து இருப்பதாக கூறப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கையும் நேற்றைய புள்ளி விவரங்களுடன் ஒப்பிடுகையில் 4 மடங்கு அதிகமாகும்.



தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்த அதிகனமழை காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள், மற்றும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை நேற்று (23.12.2023) நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, நேரில் சென்று ஆய்வு செய்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (23.12.2023) தலைமைச் செயலகத்தில், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி மற்றும் அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு அமைச்சர் பெருமக்கள் அவர்களின் ஒரு மாத ஊதியமான 35 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய், திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களின் ஒரு மாத ஊதியமான 91 இலட்சத்து 34 ஆயிரத்து 500 ரூபாய், என மொத்தம் 1 கோடியே 27 இலட்சத்து 4 ஆயிரத்து 500 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்கள்.




மிக்ஜாம் கன மழை வெள்ள நேரத்திலும் உயிரைப் பணயம் வைத்து பணியாற்றிய பத்திரிகையாளர்கள் 400 பேருக்கு சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் அரிசி மளிகை பொருட்கள் ஆகியவற்றை மழைக்கால நிவாரணமாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியாராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.






சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில் பிராட்வே டான் போஸ்கோ பள்ளியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கிறிஸ்துமஸ் பெருவிழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று 2200 பேருக்கு புத்தாடை அரிசி மளிகைப் பொருட்கள் கிறிஸ்துமஸ் கேக் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியாராஜன் மற்றும் பலர் உள்ளனர்.




# கலைஞரும் நானும் 50

**“தமிழ்நாட்டு மக்களுக்கு, தான் இருந்த வரை தலைப்புச் செய்திகளை அளித்தவர் கலைஞர். இன்றைக்கு முக்கியமான செய்தி என்ன எனத் தெரிந்துகொள்ள வேண்டுமெனில், கலைஞர் எதைக் குறித்துப் பேசி இருக்கிறார் எனத் தெரிந்து கொண்டால் போதும். அப்படியான தலைவர், கலைஞர்” எனத் தனது நினைவுகளைப் பகிர்கிறார் இயக்குநரும் நடிகருமான பாண்டியராஜன்.**

■ இயக்குநர் **பாண்டியராஜன்**

## “இவனுக்கு எதுக்கு இந்த வேலை என்றார்!”

“தலைவர் கலைஞர் அவர்களை கலைத்துறை நிகழ்ச்சிகளில் பலமுறை பார்த்திருக்கிறேன். ஆனால், அவரோடு அதிக உரையாடல், அதிக சந்திப்புகள் இல்லை. ஆனால், ஒரு சில சந்திப்புகளாக இருந்தாலும் அவர் போல அன்பு பாராட்டியவர் யாருமில்லை. “வாய்யா... பாண்டியராஜா...” என்பார்.

### அன்பே இயல்பு

கலைஞர் அவர்களின் ‘டைமிங்’ குறித்து வியப்பாக இருக்கும். பரபரப்பான நேரங்கள், டென்ஷன் எல்லாவற்றையும் கடந்து எப்படி அவ்வளவு நகைச்சுவையாகப் பேசமுடிகிறது என வியப்பேன். அந்த நகைச்சுவை உணர்வுதான் அவருடைய டென்ஷன்களை மறக்க வைத்துக் கொண்டிருந்தது.

கலைஞர் அவர்களிடம் பணியாற்றியவர் எனது மாமனார். எனது திருமண நிச்சயதார்த்தத்துக்கு வந்திருந்தார் கலைஞர். அவருக்குப் பக்கத்தில் திருமண மாப்பிள்ளை நான் அமர்ந்திருந்தேன். புகைப்படங்கள் எடுத்துக் கொண்டிருந்த நேரத்தில், கலைஞர் என்னிடத்தில் “உன் மாமனார பத்தி உனக்குத் தெரியுமா” எனக் கேட்டார். “இல்லீங்களே அய்யா” என்றதும், “ஒரு டைப்பான ஆளுய்யா” என்று கூறி, என் மாமனார் குறித்த ஒரு சுவையான சம்பவத்தைச் சொன்னார்.

அப்போது வந்த என் மாமனார் “அய்யா என்னைப் பத்தி ஏதோ பெரிய விஷயமா சொல்றீங்க போல” என்றார். அதற்கு, “ஆமா, ஆமா, உன் பெருமையைத்தான் சொல்லிக்கிட்டிருக்கேன்” என கலைஞர் கூற, அந்த இடமே கலகலப்பாக இருந்தது. தன்னிடம் பணியாற்றியவராக இருந்தாலும், அவர்களுக்குக் கொடுத்த இடம், அந்த நிகழ்ச்சியில் குடும்ப உறவுகளைப் போல சின்னச் சின்ன விஷயங்களைப் பேசி மகிழ்ந்தது எல்லாம் மறக்க முடியாத நிகழ்வுகள். அவரது உயரத்துக்கு அந்த இடத்தை அப்படிக் கையாள்வது எல்லாம் இயல்பான விஷயமில்லை. ஆனால், கலைஞர் இருந்தார். அது அவரது இயல்பாக இருந்தது.

### பாராட்டாகச் சொன்ன பாடம்

திரைப்பட முன்னோட்டக் காட்சிகளுக்கு வந்தால், அந்தப் படம் குறித்து, அவர் சொல்லும் கருத்துகள் நுட்பமாக இருக்கும். நான் ‘நெத்தியடி’ என்கிற திரைப்படத்தை இயக்கினேன். என் மாமனார் தயாரிப்பாளராக இருந்தார். அந்தப் படத்தில் இசையமைப்பாளராகவும் பணியாற்றினேன். படத்தில் ஒரு பாடலில் நானும் நடனம் செய்திருந்தேன். அந்தப் பாடலுக்கு ‘அல்ட்ரா வயலெட்’ என்கிற ஒளிப்பதிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இருந்தேன். அதுபோல அந்தப் பாடலில் அதிக ‘கெட்டப்’ களிலும் வந்தேன். அந்தப் பாடல் புதுமையாக வந்திருந்தாலும் யாரும் பாராட்டவில்லை.

கலைஞர் முன்னோட்டக் காட்சிக்கு வந்து பார்த்தார். அந்தப் பாடல் காட்சியின்போது, கலைஞர் என் மாமானாரிடம் ‘உன் மாப்பிள்ளை நல்லா ஆடியிருக்கான்யா’ என்றார். அவர் பின்னால் நின்றிருந்த எனக்கு, அந்த வார்த்தைகள் அவ்வளவு உற்சாகத்தை அளித்தன. எனது நடனத்தைக் கலைஞரே பாராட்டிவிட்டார் எனப் பெருமையடைந்தேன். ஆனால், அடுத்ததாக ‘இவனுக்கு எதுக்கு இந்த வேலை’ என்றார். எனக்கு ‘திக்’ என்று இருந்தது. “கலர் கலரா டிரஸ் போட்டுக்கிட்டு, நடனம் ஆடுறதுக்கெல்லாம் நிறைய பேர் இருக்காங்கய்யா.. இவனுக்குக் காமெடி நல்லா வரும். அத பண்ணத்தான்யா ஆள் இல்லை” என்றார். “இதுல உனக்கு செலவு நிறைய வெச்சிருப்பானேய்யா” என்றார். அந்தப் படத்தின் இயக்குநராக என்னால் கணிக்க முடியாதவற்றை அந்த இடத்திலேயே சொல்லிவிட்டார் கலைஞர்.



> **“கலைஞர் உன்ன திட்டுறார்ய்யா? என்னய்யா நீ நடிச்ச? உன்ன உடனே வரச் சொன்னார்ய்யா !”**

நான் இதைச் செய்தால், மக்கள் ரசிப்பார்கள் என்பதைத் தப்பாகப் புரிந்து வைத்திருந்தேன். ஆனால், மக்கள் யாரிடம் என்ன எதிர்பார்ப்பார்கள் என்பதை அறிந்த மாபெரும் இயக்குநர் அவர். அவர் சொல்வது சரியான கணிப்பாக இருந்தது. மக்கள் என்னிடம் என்ன எதிர்பார்ப்பார்கள் என்பதைப் புரிந்துகொள்வதற்கு கலைஞர் அவர்களின் அன்றைய வார்த்தைகள் எனக்குப் பாடமாக இருந்தன.

### ‘ட்விஸ்ட்’டை கண்டுபிடித்தார்!

யாரும் கவனிக்கத் தவறும் நுட்பமான விஷயங்களை அவர் கவனித்துவிடுவார். ‘நம்ம நாட்டுப் பொண்ணு’ என்கிற படம் எடுத்தேன். அந்தப் படத்துக்கான நாயகி முடிவாகவில்லை. அப்போது அந்த நாயகி, படத்தில் எப்படி இருக்க வேண்டும் என்று ஒரு ‘மாடல்’ வரைந்திருந்தேன். அதில் கதாநாயகி கூடையைத் தூக்கிக் கொண்டு போவதுபோல பின்பக்கமாக வரைந்திருந்தேன். டிசைனில் என் முகம் மட்டும் இருக்கும். அதையே படத்துக்கான அழைப்பிதழாக அச்சிட்டிருந்தேன்.

அழைப்பிதழ்களை வாங்கிய பலரும், ‘டிசைன் புதுசா இருக்கே’ என வியந்தனர். கலைஞர் அவர்களுக்கு அழைப்பிதழ் அளிக்கிறேன். வாங்கிப் பார்த்தவர் “கதாநாயகி யார் என்று இன்னும் முடிவு செய்யலையா?” என்றார். அந்த டிசைனைப் பார்த்து ரசித்து, அதில் இருந்த ஒரு ட்விஸ்டை சரியாகக் கண்டுபிடித்தார். அவரது நுணுக்கத்தை அறிந்ததும், எனக்கு வியப்பாக இருந்தது.

### இலக்கணம் கற்றுக் கொடுத்தார்

கலைஞரின் **‘குறளோவியம்’** நூலின் ஒவ்வொரு குறளையும் குறும்படமாக எடுத்தார்கள். ஒருநாள் எனக்கு அழைப்பு வந்தது. ‘கலைஞர் அழைக்கிறார்?’ என்றார்கள். அப்போது கலைஞர் முதலமைச்சராக இருந்தார். “என்ன சார் திடீர்னு கலைஞர் அழைக்கிறார்” என அவருக்கு நெருக்கமான ஒருவரிடம் கேட்டேன். “குறளோவியம் குறும்படத்தின் ஒரு பகுதியில் நீங்க நடிக்கணும்னு விரும்புகிறார்” என்றார். எனக்குத் ‘திக் திக்’ என இருந்தது. “ஏங்க நான் சைதாப்பேட்டை. நான் சென்னை மொழியில பேசுவேன். அவரது தமிழ் என்னால பேசமுடியாதுங்களே” என்றேன்.

நான் கலைஞர் அவர்களைச் சந்தித்த போது, அவர் எழுதிய வசனங்கள் தூய தமிழில் இருந்தன. அதை எப்படி உச்சரிக்கணும் என்பதையும் சொல்லிக் காட்டினார். ராஜா வேடத்தில் ஷூட்டிங், டப்பிங் எல்லாம் முடிந்துவிட்டது. அடுத்த நாள் இயக்குநர் சொர்ணம் அவர்கள் அழைத்து “கலைஞர் உன்ன திட்டுறார்ய்யா? என்னய்யா நீ நடிச்ச? உன்ன உடனே வரச் சொன்னார்ய்யா" என்றார்.

நான் கலைஞரைச் சென்று சந்தித்தேன். கோபத்தோடு இருந்தார். “நான் என்ன எழுதிக் கொடுத்திருக்கேன், நீ என்ன பேசியிருக்க?” என்றார். “அய்யா நீங்க கொடுத்ததுதான் நான் பேசினேன், மாற்றி எதுவும் பேசலயே” இது நான். “என்ன பேசுன? ஒரு வல்லினம், மெல்லினமே இல்லை” என்றார் அவர். “அப்படின்னாங்க” என்கிறேன் நான். உடனே சிரித்துவிட்டார். “வல்லினம், மெல்லினம் தெரியல... எப்படிய்யா குறளோவியத்தில் நடிச்ச?” என்றவர், ‘நாளைக்கு என்ன வேலை இருக்கு?’ எனக் கேட்டார். அடுத்த நாள் சென்றதும் எனக்கு எப்படி உச்சரிப்பு வருமோ, அதற்கேற்ப வசனத்தில் வல்லின, மெல்லின உச்சரிப்புகளை மாற்றி எழுதிக் கொடுத்து, டப்பிங் அனுப்பினார். நமக்கு வராததையும் வரவைப்பவராக இருந்தவர் கலைஞர். ஒருவர் மீது அக்கறை கொண்டிருந்தால், கலைஞர் அவர்கள் காட்டும் அன்பு வாழ்நாள் நினைவுகளில் நிற்கும்.

அவரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்களில், ‘எதையும் எதிர்கொள்ளும் ஆற்றல்’ என்பதை நான் பல இடங்களில் குறிப்பிடுவேன். அதை என் வாழ்நாளில் கடைப்பிடித்து வருவதற்கு அவரே காரணம். கலைஞர் குறித்த நினைவுகளைப் பகிர்ந்து கொள்வது என்பதெல்லாம் நான் பெற்ற பேறே...!.

...பகிர்வார்கள்

## கழகங்களும் கோயில்களும்- மறைக்கப்படும் வரலாறு!




ஆலயத்தில் அரசுக்கு என்ன வேலை? இந்துக் கோவில்களை இந்துக்களிடம் (எந்த இந்துக்களிடம்) ஒப்படைக்கவேண்டும், அறநிலையத் துறையைக் கலைக்க வேண்டும், கோவில்களை மட்டும் நிர்வகிக்கும் அறநிலையத்துறை பிற மத வழிபாட்டுத் தலங்களையும் நிர்வகிக்குமா? என்ற கேள்விகள் அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாகக் குறிப்பிட்ட சிலரால் திரும்பத் திரும்ப வைக்கப்பட்டு தோல்வியுற்ற வாதங்கள்.

நாத்திகக் கொள்கைகளைப் பேசிய திராவிட இயக்கம், வழிபாட்டு உரிமைகளுக்காகப் போராடியது ஏன்? அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்று கோரிக்கை வைத்தது ஏன்? தி.மு.க. இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றியது ஏன்? நீதிக்கட்சி ஆட்சிக் காலத்திலேயே அறநிலையத் துறை உருவாக்கப்பட்டது ஏன்? என்ற கேள்விகளுக்கு விடை தேடினால், மேலே எழுப்பப்படுகிற கேள்விகளுக்கு எளிமையாக விடை கிடைத்துவிடும்.

அந்தப் பணியை மிகச் சரியாகச் செய்திருக்கிறது ஆ.மலைக்கொழுந்தன் எழுதியிருக்கிற ‘கழகங்களும் கோயில்களும்’ நூல். நன்செய் பிரசுரத்தின் வெளியீடாக வந்திருக்கும் இந்நூல், அறநிலையத் துறை உருவாவதற்கு முன் கோயில்கள் யாருடைய ஆதிக்கத்தின் பிடியில் சிக்கியிருந்தன, சமஸ்கிருதம் புகுத்தப்பட்டது எப்படி? கோயில்களின் சொத்துக்கள் சுரண்டப்பட்டது எப்படி? அவற்றில் இருந்து கோயில்களையும் வழிபாட்டு உரிமையையும் அறநிலையத்துறை பாதுகாத்தது எப்படி? அதற்காக தி.மு.க கொடுத்துக் கொண்டிருக்கும் உழைப்பு என்ன என்பதையெல்லாம் சிறப்பான முறையில் விளக்குகிறது. விதண்டா வாதங்களை எதிர்கொள்ள விளக்க ஏடாகப் பயன்படும் இந்த நூல்.

## :ப்ளாஷ்பேக்



### உள்ளாட்சி வெற்றிப் படம்!

1986-ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் கழகம் மாபெரும் வெற்றிபெற்றது. அப்போது இருந்த எம்.ஜி.ஆர் தலைமையிலான அ.தி.மு.க வேட்பாளர்கள், தமிழ்நாடு முழுவதும் பெரும் தோல்வியைத் தழுவினார்கள். கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சோர்வில்லாப் பிரச்சாரத்தால், கழகம் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் வெற்றி பெற்றது. அந்த நேரத்தில் நான், எனது தாத்தா, சித்தப்பா ஆகியோர் தலைவரை **‘கோபாலபுரம் இல்லம்’** சென்று வாழ்த்துகளைத் தெரிவித்த போது இந்தப் படம் எடுக்கப்பட்டது.



பழனிகுமார்


**-பழனிகுமார், அயனாவரம், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அதிக வசனமும் — அழகாகப் பேசியதும்!

**2000 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் கலைவாணர் அரங்கத்தில் கலைஞர் எழுதிய ‘சங்கத்தமிழ்’ இசை நாட்டிய நாடகத்தின் 150-வது வெற்றி விழா நடைபெற்றது. அந்த மேடையில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் கலந்துகொண்டு பேசினார். கலை உலகத்தில் கலைஞர், தனக்குத்தான் அதிகமாக வசனம் எழுதி இருக்கிறார் என்றும், தான் அதிகமாகப் பேசியதாகவும் குறிப்பிட்டார். அதற்கு பதிலளித்த கலைஞர் “அதிகமாகப் பேசியது மாத்திரமல்ல, மிகவும் அழகாக என்னுடைய வசனங்களைப் பேசியதும் நீங்கள்தான்” என்றார்.**




Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131